தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை 19—11—55. சனிக்கிழமை | இதழ் 23

பொன்னாடை போர்த்தப்பெற்ற தென்னாட்டுக் கலைஞன் வாழ்க!

கலைவாழ்வில் புதுப்பாடம் கற்பித்த கலாநிதி! சிரிக்க வைத்து உடலைச் செழிக்க வைக்கும் சீர்திருத்தச் செம்மல்! ஏழையர் உள்ளம் தோட்டு ஓலைக் குடிசைகளையும் மகிழ்வித்த மக்கள் கலைஞன். எழுத்துக்கு எழுத்து பொருள் வைத்து, சொல்லுக்குச் சொல் விளக்கம் தந்து, புதுமை புகவொண்ணாப் பழமை உள்ளங்களின் இரும்புக் கதவுகளையும் உடைத்தெறிந்து மறு மலர்ச்சிக் கருத்துக்களுக்கு வித்தூன்றிய புதுமைப் பிரியன்-நகைச்சுவைப் பேராசிரியன்! ஆம்; நமது கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் தமிழகத்துச் சார்லி சாப்ளின். அடக்கி ஆளப்பட்ட மக்களைத் தட்டி யெழுப்பி தனிப்படை சேர்த்த பிரான்சு நாட்டு லாபுசியரின் குணம் கொண்ட தென்னாட்டுக் கலையுலக மகுடபதி. அவருக்குப் பொன்னாடை போர்த்தி நன்றி செலுத்திப் பெருமை எய்தியது தென்னிந்திய நடிகர் சங்கம்,

13—11—55 அன்று மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்குப் பொன்னாடைபோர்த்தப்பட்டது. பேராசிரியர் ரா.பி. சேது (பிள்ளை) அவர்கள் தலைமையில் நாடகப் பேராசிரியர் ப. சம்பந்தனார் கலைவாணருக்குப் பொன்னாடை போர்த்தினர்.

வாழ்க கலைவாணர்!

வளர்க அவர்தம் தொண்டு!

மகாராசன் கப்பல்

— தென்னரசு —

தோகை மயிலே, கிழமை தவறாது உனக்குக் கடிதம் எழுதிக்கொண்டு வந்தேன். ஆனால், கடந்த மூன்று திங்கள்களாக அவ்வாறு தொடர்ந்து எழுதுவதற்கு இயலவில்லை. வழக்கமாகத் தொடர்ந்து கிடைத்துக் கொண்டு வந்த இன்பம் திடீரென்று தடைப் பட்டால்—கொடுக்க மறுக்கப்பட்டால் சந்தேகம் எழுவது இயற்கை — அது மனித சுபாவம். நீ துடித்திருப்பாய்—மூடி மன்னன் மறந்தாரோ-என்று மன வேதனைப் பட்டிருப்பாய். அன்பு கொண்டோரிடமிருந்து கடிதத்தை எதிர்பார்ப்பதிலே எவ்வளவு இன்பம் இருக்கிறது என்பதை நானும் நன்குணர்ந்தவன்தான். தபால்காரர் தன்னுடைய தெருவுக்கு வந்து விட்டாலே, உன் வீட்டுக்குத்தான் வருகிறார் என்று எண்ணியிருப்பாய். தெருவிலே கேட்கும் வண்டி மாட்டின் மணிஒலி கூட, தபால்காரரின் சைக்கிள் மணியாகத் தோன்றும். நற்றிணையிலே ஒரு பாடலுண்டு; உனக்குத் தெரியுமோ என்னவோ! காதலனை எதிர்பார்த்திருக்கும் காதலிக்கு, மரத்தின் உச்சியிலே இருக்கும் கூட்டிப் பறவையின் சிறகடிப்புக் கூட காதலனின் தேரில் பூட்டப்பட்டிருக்கும் குதிரையின் குளம்பொலியாகக் கேட்குமாம். அந்த நிலைதான் உனக்கும் இருந்திருக்கும் என்பதை நானறிவேன். ஆசையின் துடி துடிப்பு அத்தகைய நினைவுச் சித்திரத்தைத்தான் தீட்டிக் காட்டும் என்பது நான் அனுபவப் பூர்வமாகக் கண்ட உண்மையாகும்.

தோகை, உன் மேல் எனக்குக் கோபமில்லை. நீவேறுகட்சியிலே இருக்கிறாய் என்ற பொருமையும் கிடையாது. நான் பண்பட்ட தலைவனால் வளர்க்கப்பட்டவன் என்பதை நீயே பல முறை ஒப்புக்கொண்டிருக்கிறாய். ஆனாலும் ஏன் கடிதம் எழுதவில்லை என்று கேட்கிறாய்? அப்படித் தானே! நேர்முகமாகவும், நிருபத்தின் வாயிலாகவும் உன்னிடம் பல முறை வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கிறேன், நாட்டின் நிலைமையைச் சிந்தித்துப் பார் என்று. ஏடுகளிலே புகழப்பட்ட நாடு, நாகரிகமிக்க நாடுகளிலே விரல்விட்டு எண்ணப்பட வேண்டிய நாடு, பூத்துக் குலுங்கி, புது மணம் பெற்று, தன்னுடைய உடைமைகளைத் தானே காத்துக் கொண்டுவந்த பூமி, நாளுக்கு நாள் நலிவுற்றுக் கொண்டிருக்கிறது - படித்துப் பார் சரித்திரத்தை-சிந்தித்துப்பார் ஓய்வு நேரத்தில்-என்று உனக்கு எத்தனை முறை சொல்லி யிருக்கிறேன். எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வதை தனக்கு வேண்டாத கருத்துக்களாக ஒதுக்கித் தள்ளும்.தீய குணம், உன் கட்சியிலே படர்ந்து கிடக்கிறது என்பதற்கு உன் குணமே போதுமான சான்றாகும். நான் என்ன சொன்னேன்? ஓடி வந்து விடு என் கட்சிக்கு என்று எப்போதாவது சொன்னதுண்டா? சிந்திக்காமல் திடீர் திடீர் என்று ஓடி வந்தவர்களையெல்லாம் வாரி அணைத்துப் போட்டுக் கொண்டதுதான் நீ சார்ந்திருக்கும் காங்கிரஸ் மண்டபம் துரோகத்தின் கிட்டங்கியானதற்குக் காரணமென்று உனக்கு எத்தனையோ முறை சொல்லி யிருக்கும் நான், உன்னை, சிந்திக்காமல் என் கட்சிக்கு இழுத்துப் போடவா முனைந்திருப்பேன்? வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கென்றே நிழல் கண்ட இடத்திலெல்லாம் நின்று நின்று பிழைப்பவர்களை, நான் எப்போதும் வெறுப்பவன். அவர்களால் துன்பங்கள் பல அனுபவித்தவன். அந்தக் கதைதான் உனக்கும் தெரியுமே!

தோகை, இவ்வளவு பெரிய முன்னுரையை என்னுடைய கருத்துக் கடிதத்திற்கு திறவு கோலாக அமைத்து வந்திருப்பதிலிருந்து, இந்தக் கடிதத்தில் ஏதோ புது விஷயங்கள் இருக்கும் என்று நீ எதிர்பார்க்கக் கூடும். அப்படி ஒன்றும் புதிய செய்திகள் இல்லை-ஆனால் கடந்த வாரத்திய ஒரு சில அரசியல் நிகழ்ச்சிகள் என் உள்ளத்தைக் குத்திக் குடைகின்றன. மானம் போதித்த நாட்டாரிடமிருந்து மானம் விலை கூறப்படுவதை மானமுள்ளவர்கள் ஒப்புவார்களா?

சென்ற திங்கள் சென்னைக்கு பண்டித நேரு வந்தார், சென்னையில் பல இடங்களில் பேசினார். பொதுக் கூட்டத்திலும் நீண்டதோர் உரை நிகழ்த்தினார். வட நாட்டு ஆதிக்கத்திற்குத் தென்னாட்டிலே எதிர்ப்பிருப்பதைப் போலீஸைக் கொண்டு மிரட்ட முயற்சிப்பது நேருவுக்குத் தெரியக் கூடாதாம்! அதற்காக என்ன செய்தார்கள்? பொதுக் கூட்ட மேடையில் நேரு உட்கார்ந்திருக்கும்போது போலீஸ் படை எழுந்து நிற்க வேண்டும்-நேரு நிற்கும்போது போலீஸ்கள் உட்கார்ந்துவிட வேண்டும்-இப்படி ஒரு 'புத்திசாலித்தனமான' உத்தரவு சென்னை சர்க்கார் உத்தரவு! போலீஸ் தர்பாரைத்திரையிட்டுவிட்டு போலீக் கவுரவத்தை, எத்தனை நாளைக்கு இந்த சென்னை சர்க்கார் சம்பாதித்துக் கொண்டிருக்க முடியுமென்று நினைக்கிறாய்? மக்களிடம்நல்ல பெயர் எடுக்க வகையற்று, அந்த மக்களை அடக்கி யாளும் கிரீடம் தாங்கிகளின் அன்பைப் பெற முயற்சித்த அமைச்சர்கள், இறுதியிலே யாரிடம் சன்மானம் பெற்றிருக்கிறார்கள் தெரியுமா? எந்த மக்களின் உள்ளக் கொந்தளிப்பை மறைத்தார்களோ அந்த மக்களின் கரங்களுக்குத்தான் தங்களது சிரங்களை 'அன்பளிப்' பாக்கி யிருக்கிறார்கள்! மக்கள் கரம் வலுப்பெற வலுப்பெற, மன்னன் கழுத்தின் சுற்றளவு குறைந்து விடும் என்பதை புரட்சி கண்ட நாடுகள் நமக்கு அறிவுறுத்தி விட்டன. இருந்தாலும் நமது நாட்டு அப்பாவிகள் இன்னும் தீ ஜுவாலைக்கு எதிரிலேயும் தேசியத் தெம்மாங்கு பாட நினைக்கிறார்கள்—போலிக் கவுரவம் பெறும் முயற்சி இந்த வாரமும் சென்னையில் நடைபெற்றிருக்கிறது, ராஜேந்திரப் பிரசாத் பிரசன்னமாயிருந்தபோது! அரசாங்கத்தின் பொறுப்புள்ள பதவியில் இருப்போருக்கு பாதுகாப்பு அவசியம்தான். தேவையில்லை என்று சொல்ல மாட்டோம். ஆனால், மக்களைத் துச்சமென மதிக்கும் போலீஸ் கெடுபிடி தேவைதானா? சென்னை மவுண்ட் ரோட்டிலே ராஜேந்திரர் ஊர்ந்து வந்த வேளைகளில் போலீஸ் படை வழக்கம் போல் தெருவின் எதிர் எதிர் திசைகளில் இருக்க வேண்டியவர்கள், சாலை ஓரத்திலே நின்று, ராஜேந்திரர் கறுப்பா, சிவப்பா என்று பார்க்க இருந்த மககள்முகம் பார்த்து நிற்கத் தொடங்கினார்கள். அவர்களுக்கு மேலதிகாரிகளின் உத்தரவு அப்படி! மக்கள் மீது அவ்வளவு நம்பிக்கை! மக்கள் ஆத்திரமடைந்து ஏதும் தகாதது செய்து விடுவார்களோ என்று கருதுகிற அளவுக்கு அத்துணை (!) சிறப்பான நிர்வாகம்!

சுதந்தர நாட்டில்-குடியரசு நாட்டில் இப்படியெல்லாம் நடைபெறுவதை வெளிநாட்டான் பார்த்தால் சிரிக்க மாட்டானா? அமைதியின் காவலனும் அலகாபாத் ஒளி விளக்கின் நேரடி ஆட்சியிலா இந்தத் துப்பாக்கித் துரைத்தனம் என்றுஇடித்துரைக்க மாட்டானா? தோகை, இவையெல்லாம் உனக்கு அலட்சியமாகத்தானிருக்கும். நீ ஆளும் கட்சியின் ஈடுபாடுடையவளல்லவா! உனக்கு அப்படித்தானிருக்கும்! பிறந்த பொன்னாட்டைக் கறந்து வாழும் பிற நாட்டார்-பிழைக்க வந்த வடநாட்டார் எத்தனை எத்தனை கொடுமைகளை இழைத்து வருகிறார்கள்? நீ அறிவாயா அவைகளை? நாட்டுப் புறத்தில் இருந்து கொண்டு காடு சுற்றி, கழனி பார்த்து, அவைகளைச் சுக வாழ்வுக்குப் புதையல்களாக மாற்றிடும் நற்பணியில்தான் நீ ஈடுபட்டிருக்கிறாய்! ஆனாலும், உழைத்து அதன் மூலம் வாழ்வைப் பரிணமித்திடச் செய்து கொள்ளும் நீ கூட, ஏன் தென்னாட்டை அடிமை கொள்ளும் வடவருக்கு தமிழை அழிக்க முயலும் 'இந்தி'யர்களுக்குப் பரிந்து பேச வேண்டும்? எனக்குப் புரியவில்லை தோகை. இந்த வாரத்தில் இரண்டு செய்திகள் என் உள்ளத்தை உலுக்கிவிட்டன. ரஷ்யத் தலைவர் புல்கானிங்குக்கு சென்னையிலே வரவேற்பு நடத்தப்போகிறார்கள்! நேரு வந்து கெஞ்சிக் கேட்டுக்கொண்டு போனதைத்தான் உனக்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறேனே! அவருடைய வேண்டுகோளைத் தலைவணங்கி ஏற்றுக்கொண்ட 'தலையாட்டி பொம்மைகள்' புல்கானிங்குக்கு **அதிகாரப் பூர்வமான** வரவேற்பு நடத்தப் போகிறார்களாம்! பெருந்தலைவன்—பொதுவுடமை நாட்டின் தலைவன்—ஏழைகளின் விழிகளுக்கு இன்ப ஒளி தந்த ரஷ்ய நாட்டுக் காவலன்—அவருக்கு வரவேற்பு அளிப்பதிலே நமக்குக் கருத்து மாறுபாடு கிடை

(3-ம் பக்கம்)

அறிஞர் அண்ணா,
பொதுச் செயலாளர்
புதுவை வருகை

காலம் :
27-11-55 ஞாயிறு மாலை 6 மணி
இடம் :
ஒதியஞ்சாலைத் திடல்

அறிஞர் அண்ணா
பொதுச் செயலாளர்
இரா. நெடுஞ்செழியன்
இவர்கட்குப் புதுவைத் தி. மு. கழக வட்டக்குழுச் சார்பில் வரவேற்பளிக்கப்படும்.

தி. மு. க. வட்டக் குழுவினர்,
புதுவை



தி. மு. கழகக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காகவும், இலக்கிய மன்றங்களில் சொற்பொழிவாற்றுவதற்காகவும், தோழர்களின் அழைப்பிற்கிணங்க இலங்கை சென்றிருந்த ஆசிரியர் கண்ணதாசன் காரைக்குடி வந்திறங்கி, அங்கிருந்து கார் மூலம் நவம்பர் 20-ம் தேதி ஞாயிறு அன்று சென்னை வந்து சேர்வார்.

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 2 | 19-11-55 | இதழ் 23

வந்தார் - போனூர்!

உறவை வளர்க்கவேணடும் ! தென்னுட்டை டில்லி சர்க்கார் கறவை மாடு என நினைத்திருக்கிறது, என்பதாகத் தமிழ்நாட்டில் பேசப்படும் தவருன கருத்துக்களைத் திருத்தவேண்டும் - வடநாட்டிற்கும் தென்னுட்டிற்கும் பாலம் அமைக்கவேண்டும்-என்பதாக டில்லியிலுள்ள உயர்தர அதிகாரியின் வட்டாரத்தில் கொஞ்சநாட்களாகத் தொடர்ந்து பேசப்படுவதை நாம் அறிவோம்; தேசீய ஏடுகளும் அத்தகைய செய்திகளைப் பெரிதாக்கி விரிவுபடுத்தி, அத்தகவல் நம் உள்ளங்களிலே தேன் பாய்ச்சும் என்று கருதிக்கொண்டு, விளம்பரம் செய்துகொண்டிருந்தன. சிம்லாவிலே உள்ள சர்க்கார் மாளிகையைப்போல தமிழ்நாட்டிலும்ஒரு மாளிகை எழுப்பி, அடிக்கடி வடநாட்டுத் தலைவர்களைத் தமிழ்நாட்டுக்கு இறக்குமதி செய்து, அங்கு தங்கவைத்தால், தென்னுட்டிலே உள்ள எதிர்ப்பு செத்துப் போகுமென்று புதுடில்லிப் புரோகிதர்கள் எண்ணினுர்கள். அந்த எண்ணத்தின் ஒத்திகைதான் அண்மையிலே ராஜேந்திரப்பிரசாத் சென்னை வந்து போனதும்! வடக்கத்தித் தலைவர்களை அடிக்கடி தரிசிக்காததன் விளைவுதான் தென்னுட்டில் பிரிவினைக்குரல் பெருகுவதற்குக் காரணம் என்று, பீடத்து உள்ள பெரியமனிதர்கள் தீர்மானித்தது தவறு என்பது ஒருபுறமிருக்க, அந்தத் தீர்மானத்தின்படி நடைபெற்ற முதற்பணியே, அவர்களது ஆசைக்குக் கொள்ளிக்கட்டையாக அமைந்துவிட்டது.

ராஜேந்திரப்பிரசாத் !

சரியாகவோ தவருகவோ ஒரு துணைக்கண்டத்தின் குடியரசுத்தலைவர் என்று கருதப்படுபவர். அதுவும் அடிக்கடி வராமல் அத்திபூத்தாற்போல் எப்போதாவது வருகிறவர். சூது வினையமற்ற சாது என்று கருதப்படுபவர், சென்றவாரம் சென்னை வந்த நிகழ்ச்சி, ஏதோ வந்தார் போனுர் என்று ஆயிற்றே தவிர, பிரசாத் வந்தார் பிரகாசித்தது சென்னை என்று சொல்லும் வகையிலே ஒன்றும் அமையவில்லை. பாதுகாப்புக்கு நின்ற போலீசைக் கேட்டு, சாலையிலே போகின்ற பொதுமக்கள் பிரசாத்தைத் தெரிந்துகொண்டார்களே தவிர, ஒரு குடியரசுத் தலைவரின் வருகைக்கான கோலாகலம் காணப்படவில்லை. வடநாட்டையும் தென்னுட்டையும் ஒட்டவைக்க வருகிருர். தேய்ந்துவரும் தென்னுட்டுத் தேசீய பக்தியை மெருகேற்ற வருகிருர். வருகின்றவரோ சாமான்யரல்லர். ஆனுலும்,வரவேற்பில் உயிரில்லை.

தென்னுட்டுக்கு அடிக்கடி வந்துபோன நேரு, தன்னிடம் தென்னுட்டு நிலைகுறித்து அவர் சொன்னதை எல்லாம் பிரசாத்,தானே 'பிரசன்னமாகி'த் தெரிந்துகொண்டார். தென்னுட்டின் உயிர்த்துடிப்பில் உல்லாச ஊஞ்சல் கட்டி, ஒயிலாக ஆடி மகிழத்திட்டமிட்ட டில்லி ஏகாதிபத்யம், எந்த முறையிலே உறவை வளர்க்க எண்ணியது? திராவிடர் இனமுழக்கத்தைக் கொன்றுவிட முடிவுகட்டிய நேரு சர்க்கார், எத்தகைய முறையை முதல் முறையாகக் கையாண்டிருக்கிறது ? குடியரசுத் தலைவரை அனுப்பி, தென்னவரின் இதயங்களையெல்லாம் குளிரச் செய்துவிடலாம் என்று கருதியவர்கள் தயாரித்த நிகழ்ச்சி நிரலில் முதல் நிகழ்ச்சிதான் என்ன ? யாருடைய இனமுழக்கத்தை ஒழித்துவிட ஆசைப்படுகிருர்களோ, அந்த இனத்தின் வழித்தோன்றலான ஒரு மாவீரன, சதியால் கொல்லப்பட்ட துக்க தினத்தை தீபா அலங்காரத்தோடு கொண்டாடுவதிலே, உறவு தேட வந்தவரின் உல்லாச நிகழ்ச்சி தொடங்கியது. அந்தத் தீபாவளிக் கொண்டாட்டத்தில் எவ்வளவு (அ)நீதி அடங்கியிருக்கிறது என்பதை பிரசாத் அறிந்துகொண்டார் அவருடைய உள்ளத்து இருளை ஆங்காங்கு அணிவகுத்து நின்ற போலீஸ் படை நமக்கு விளக்கியது. அதுபோல அவரது வருகையைத் தென்னுட்டு மக்கள் எவ்வளவு ஆவலோடு எதிர்பார்த்தார்கள் என்பதையும் அதே போலீஸ் படைதான் அவருக்கு உணர்த்தியிருக்கும். வந்துபோகிற வடநாட்டுத் தலைவர்கள் எல்லாம் நமக்கு நமது நாட்டைச் சேர்ந்த முதுமொழிகளை நினைவுபடுத்திவிட்டுப் போவது வழக்கம். அண்மையிலே வந்துபோன அலகபாத் பண்டிதர், "ஆறிலேயும் சாவு, நூறிலேயும் சாவு" என்ற முதுமொழியை நமக்கு நினைவுபடுத்திவிட்டுப் போனுர். ஆனுல், ராஜேந்திரர், "அன்னநடை பயிலப் போய்,தன் சொந்த நடையையும் மறந்தாள்" "குளிக்கப்போனவன் சேற்றைப் பூசிக்கொண்டான்"- இந்த இரண்டு முதுமொழிகளையும் நினைவுபடுத்திவிட்டுப் போயிருக்கிருர். நட்பை வளர்க்கவந்த அவர், தென்னுடு சாவு வீடாக இருக்கவேண்டிய தினத்தன்று மத்தாப்புக் கொளுத்தி, மாடப்புருக்கள் பறக்கவிட்டு, புத்தாடை உடுத்தி, தென்னுட்டு மக்களின் மனக்கசப்பைச் சம்பாதித்துக் கொண்டுபோய்விட்டார். அவருடைய பயணத்தில், திருப்பதியிலே வடமொழியில் அரும்புவிட்ட வெறுப்பு உணர்ச்சி தீபாவளிக் கொண்டாட்டத்தில், அவர் கொளுத்திய மத்தாப்பைக் காட்டிலும் அதிகமாக ஒளிபெற்றுவிட்டது. பாவம் !

மகராசன் கப்பல் ......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யாது. ஆனுல் அளிக்கின்ற வரவேற்பு அந்தந்த மாநிலத்து மக்களுக்கு திருப்தி யளிக்கக்கூடியதாக இருக்க வேண்டாமா?

சென்னை நகரசபையில் வரவேற்பை இந்தியிலே வாசித்தளிக்கப் போகிருர்களாம் ! எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் இவ்வளவு பெரிய மக்கள் சக்தியை — இந்தியை எதிர்ப் போரின் எழுச்சியைத் தூசாக மதித்திருப்பார்கள் மத்திய சர்க்கார் உத்தரவாம் இந்தியில் தான் வரவேற்பு அளிக்கவேண்டுமென்று ! வரவேற்பளிக்கும் மக்கள் தங்களுடைய தாய் மொழியாலேதான் வாழ்த்த வேண்டும்—அவர்களின் இதயங் கனிந்த மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தாய்மொழியில் கொண்ட வரவேற்பில் தான் காட்டமுடியும் ! உனது கட்சிக்காரர்களுடைய 'அறிவுத் திட்சண்ய'த்தை நீயே எடை போட்டுப் பார் தோகை ! தலைவர் புல்கானிங்குக்கு, தமிழும் தெரியாது, இந்தியும் தெரியாது. முறைப்படி பார்த்தால் வட்டார மொழியாலும்,அவரறிந்த பொது மொழியாம் ஆங்கிலத்திலும் தான் வரவேற்பளிக்க வேண்டும். ஆனுல் டில்லி 'தவப் புதல்வர்'களின் கட்டளை, புல்கானிங்குக்கும் தெரியாத—வரவேற்பு வாசித்துக் கொடுக்கும் வட்டாரத்து மக்களுக்கும் தெரியாத இந்தி மொழியிலே வரவேற்பு வாசித்தளிக்க வேண்டுமாம் ! இந்த ஏற்பாடு உனக்கு உடன்பாடுதானு? நகரசபை உறுப்பினர்களில், தமிழ் மொழியின்பால் அன்புகொண்டோர்— அக்கறை கொண்டோரிடையே பெரிய கொந்தளிப்பு உண்டாகியிருக்கிறது. இந்தியிலே வரவேற்பு இதழ் வாசித்தளிப்ப தாயின் தமிழார்வம் கொண்ட உறுப்பினர்கள் 'வெளி நடப்பு' செய்வதாக தெரிவித்து விட்டார்கள். இது பாராட்டப்பட வேண்டிய திருப்பணி என்று தான் நான் நினைக்கிறேன். இந்தியாவின் கவுரவம் பாதுகாக்கப்பட வேண்டுமானுல், புல்கானிங்குக்கு மகிழ்ச்சியோடு வரவேற்பு நடத்தவேண்டுமென்று நீ விரும்பும் நேரு பண்டிதர் சொல்லிவிட்டுப் போனுர். அவர் சொல்லிப் போன 'இந்தியாவின் கவுரவம்' என்னவாகிறதோ தெரியவில்லை!

தோகை, மொழியைத் தான் குழிதோண்டிப் புதைத்துவிட எண்ணி விட்டார்கள் என்ரு நினைக்கிருய்! தென்னுட்டில் மக்கள் பெருக்கத்தை அதிகப்படுத்தி இந்த நாட்டை வறுமைக்காடாக்கவும் டில்லிக்காரர்கள் முடிவுகட்டி விட்டார்கள். இலங்கையிலுள்ள நமது இனத்தாரை லட்ச லட்சமாக திருப்பி அனுப்பி விட அங்கே சதி நடைபெறுகிறது; மலாய் நாட்டில் உள்ள நம்மவர்களை எப்படிக் குறைக்கலாம் என்பதற்குத் திட்டங்கள் தயாராகி வருகின்றன ; தென்னுப்பிரிக்காவிலே உள்ள தமிழர்களுக்கும் நாளுக்கு நாள் நெருக்கடி வளர்ந்து வருகிறது ; இவர்கள் நமது மக்கள் ; எப்போதாவது நம்மோடு சேர்ந்துவிட வேண்டியவர்கள் ; ஆனுல் நமக்குப் பயன்படாதவர்கள்—நமது உழைப்பை ஊதியமாக்கிக் கொண்டு தங்கள் உடலை ஊற வைத்துக்கொள்ள முனையும் வேருெரு புதிய கும்பலும் அல்லவா தென்னுட்டில்—அதுவும் இந்த நேரத்தில் குடியேற இருக்கிறது ! தெரியுமா உனக்கு ? கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து மாதந்தோறும் இருபதாயிரம் அகதிகள் இந்தியாவுக்கு வந்து கொண்டிருக்கிருர்களாம். அவர்களைக் குடியேற்ற ஒரு இடம் தேவையாம். அந்த இடம் சென்னை மாநிலம் தானும் ! கேவலம் ! சூடு சுரணையற்று போய்விட்டது தென்னுடு? இது வதந்தியல்ல தோகை ! இந்த ஏற்பாட்டைச் செய்ய இந்திய அகதிகள் இலாகாச் செயலாளர் சி. என். சந்திரா சென்ற வாரம் சென்னை வந்து அதிகாரிகளைக் கண்டு அதுபற்றிப் பேசிப் போயிருக்கிருர். உலகின் பல பகுதிகளிலிருந்து விரட்டப்பட இருக்கும் தமிழர்களுக்கு இங்கு இன்னும் வழிவகை காண எந்த சர்க்காரும் முயலவில்லை ; அதற்குள்ளாக வடநாட்டு அகதிகளுக்கு இடம் தேடத் தொடங்கி விட்டார்கள் ! வந்தேறும் அகதிகளைக் கொண்டு வாழ்வோரை அகதிகளாக்கும் சதி நடைபெறுகிறது. 'வந்ததெல்லாம் கொள்ளும் மகராசன் கப்பல்' என்று தமிழ் நாட்டைக் குறிப்பிடுவார்கள்—அன்று ! அந்தத் தமிழகம் சுதந்தரத் தமிழகம், இன்றையத் தமிழகம் தாழ்பணிந்து வாழ்வு நடத்தும் வகைகெட்டதாயிற்றே! இனி எப்படி இது மகராசன் கப்பலாக இருக்க முடியும், ஒரு வேளை உன் போன்றுர் விழிப்புற்று இனமுழக்கம் செய்தால் பழைய தமிழகத்தை—மகராசன் கப்பலாக விளங்கிய தமிழகத்தைக் காண முடியும் ! அது என்ருே ? தோகை, முடியுமா ? முயல்வாயா ?

—முடிமன்னன்.

வேலங்குடித் திருவிழா

◉

ஆசிரியர் இலங்கை சுற்றுப் பயணத்தில் இருப்பதால், வேலங்குடித் திருவிழா தொடர்கதை, அடுத்த இதழில் நிச்சயம் இடம்பெறும்.

கொழும்பு மலர்

தென்றல் - அடுத்த இதழ் 3-12-55 அன்று அதிகப் பக்கங்களோடும், ஏராளமான படங்களோடும் கொழும்பு மலராக வெளிவரும். 26-11-55ம் தேதிய இதழ் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

பாரதியும் — கவிதையும்



கவிஞனுய்ப் பிறந்தவன் காணும் இயற்கைத்
தாயின் மடியில் தவழ்ந்து மகிழ்ந்தவன்
உலகப் பள்ளியில் ஓதித் தெளிந்தவன்
அஞ்சுதல் இல்லா ஆண்மையன் நறுமணப்
பாமலர் தொடுத்துப் பாடுவ தவன்தொழில்
கவிதை மணிப்பெயர்க் காதலி கொழுநன்
வையம் முழுதும் வணங்கிப் பணியப்
பாட்டுத் திறத்தால் பாலித் திருந்தோன்
கவிஞர் தம்முள் மணிமுடி யரசன்
புதுமை பூக்கும் பொதுமைப் பூங்கா
பழமையை ஒதுக்கிப் பாயும் ஆறு
செவியில் இன்னிசை சேர்க்கும் அருவி
எட்டய புரத்தில் எழுந்திடும் பரிதி
அவனே பாரதி வாழிய அவன்பேர்!
இசைதரு கவிதை இயம்பிய பாரதி
பாட்டைப் பண்ணுெடு கேட்ட பட்டிக்
காட்டான் பகர்ந்ததாய்க் கவிமணி இசைத்தபின்
யானுங் கூறல் நானுந் தகைத்தே
இருப்பினும் உரிமை எனக்கும் உண்டு;
பாரதி தாசன் பரம்பரை வந்தோர்
பலர்பலர் ஆவர்; பாப்புனை தொழிலால்
யானுமம் மரபே யாவரும் அறிவர்,
பாரதி தாசனைத் தந்தோன் பாரதி
அத்தகு முறையால் அவன்என் பாட்டன்
பாட்டன் பாட்டினைப் பாடுவன் கேண்மோ!
கதிரோன் மறைதல் காணு நாட்டிற்
காரிருள் நுழையக் கண்டதப் பாட்டு;
விட்டில் நாட்டில் வெறுத்தோம் தமிழை
கண்ணயர்ந் திருந்தோம் கண்டனன் துடித்துப்
பாரெலாம் தமிழொலி பரப்புக என்றே
ஆணை தந்த(து) அவன்நா லன்றோ?
நெஞ்சில் உரமிலார் நிமிர்ந்து நடந்திட
வஞ்சனை போக்கி வாழ்வு மலர்ந்திட
உடலும் உளமும் உரம்பெறப் பாடிச்
சோதிடம் இதழ்எனச் சொல்லும் அந்நூல்;
ஏழை அடிமை சாதியில் இழிந்தோர்
இல்லை! எவரும் ஒருநிகர் எனவே
சாற்றி முழங்கும் சமநிலைப் பாடல்;
குளத்தில் மரத்தில் குடிகொளும் பேய்என
உளத்தில் நடுக்குறும் உரமிலார் அதற்கு
மந்திரம் சூனியம் யந்திரம் என்பார்
அந்தியில் பகலில் அஞ்சியே சாவார்
சிப்பாய் தலையில் சிவப்பைக் காணின்
அப்பா என்றே அப்பால் ஒளிவார்
கஞ்சி யில்லாக் காரணம் ஓரார்
பஞ்சம் பஞ்சமெனப் பரிதவித் திருப்பார்
நிலையினைக் கண்டு நெஞ்சு பொறுஅது
கதறிச் சிந்திய கண்ணீர்த் துளிகள்
பாரதி தந்த பாடல்கள் ஆகும்;
கற்பெனப் படுவது கன்னியர் தமக்கே
வற்புறுத் துவதை ஒப்புதல் செய்யோம்
ஆடவர் தமக்கும் அதனை வைப்போம்
ஏடுகள் செய்வோம் இளைப்பிலை உமக்கு
மாடுகள் அல்ல மாதர்கள் நாங்கள்
சட்டம் செய்வோம் பட்டம் ஆள்வோம்
கட்டினைத் தகர்ப்போம் எனக்கனல் கக்கி
மங்கையர் வழக்கிடும் மன்றமும் ஆகும்;
கூடும் பொருளின் கூட்டம் தெய்வம்
விண்ணும் மண்ணும் வெயிலும் நிழலும்
அறிவும் உயிரும் அனைத்தும் அஃதே
எழுதுகோல் தெய்வம்என் எழுத்துந் தெய்வம்
குழந்தையும் கூளமும் தெய்வம் என்றே
கடவுட் கொள்கை கழறும் மறைநூல்;
சத்திரம் சாவடி தண்ணீர்ப் பந்தர்

தமிழரசன்

வைத்தன போதும், வாழ்வினில் ஒளிதர
ஏழை மாந்தருக் கெழுத்தறி வித்து
வீடுகள் தோறும் கலைவிளக் கேற்றுக
வீதிகள் எங்கணும் வேண்டுக பள்ளி
கல்வி இலாததோர் ஊரினைக் காணின்
ஒளிநெருப் புண்ண ஊட்டுக என்று
பொங்கி எழுந்த புரட்சிச் சின்னம்;
பறையர் குறவர் பரவர் மறவர்
திறமை மிகுத்திடும் தீதறு தொழிலைப்
புரிந்தன ராகிப் புகழ்தரு கல்வி
அறிவால் உயர்ந்திட அகிலம் எல்லாம்
வீறிட் டெழுந்த விடுதலை முரசம்;
வேதனை தந்திட வேற்படை வரினும்
தலையில் வானம் தகர்ந்து வீழினும்
அச்சம் இல்லை அச்சம் இல்லைஎன்(று)
ஆர்த்தெழுங் கவிதை போர்படை வரிசை,
செத்தபின் செல்லும் உலகம் உளஎனல்
பித்துரை பேயுரைஎன் றூதிய சங்கம்;
சுதந்தர தாகம் தணிக்கும் சுனைநீர்;
அடிமையில் மோகம் அழிக்கும் சுடரொளி;
தாய்கை விலங்குகள் தகர்க்கும் சிற்றுளி;
இன்னல்கள் தீர்க்கும் இனியநன் மருந்து;
ஒருவற் குணவிலை எனுமுரை கூறின்
உலகை அழிப்போம் எனஎழும் அணுவெடி;
சாதி மதங்களைச் சாய்த்திடும் கொடுவாள்;
கற்றோர் மற்றோர் கற்பதற் கெளியது
தேன்படு சுளையெனத் தித்தித் திருப்பது
தாய்மொழி மறந்து தாழ்வினில் விழுந்து
தமிழர் எனும்பெயர் தாங்கிடும் அன்பர்
ஆணவம் அடங்க அறிவுரை புகல்வது.
வாழத் தமிழ்மொழி வழிகள் காட்டினன்
நீளத் திரிந்து நெறிதடு மாறிக்
கண்குரு டாகிக் காலங் கழித்தோம்
நாட்டுணர் வூட்டும் பாட்டுகள் சொன்னுன்
கேட்டில செவிகள் கிடந்தனம் செவிடாய்
இசைத்தமிழ் பாடினுன் இனித்தது தெரிந்தும்
வசைக்கிலக் காகித் தமிழிசை மறந்து
வாய்திற வாமல் ஊமைய ராகி
வாழ்ந்தோம், மங்கையர் வாழ்வினிற் புதுமை
மலர்ந்திடக் காணும் மதவெறி கொண்டோம்
பழமைச் சேற்றில் படிந்தோம் மூடச்
செயல்கள் பலவாய்ச் சேர்த்தோம் அந்தோ
ஒற்றுமை விடுத்தோம் கற்றவை மறந்தோம்
செற்றிடு விலங்குச் செயல்கள் மிகுத்தோம்
அவன்மொழி மறந்தோம் ஆர்ப்பரித் திருந்தோம்
மண்டபங் கண்டோம் மாலைகள் சூட்டினும்
கவிதைத் தொகுப்பெலாம் கண்கவர் முறையில்
அச்சில் வெளியிட் டகமிக மகிழ்ந்தோம்
ஐயகோ பற்பல பாடல்கள் காணும்
சிதைந்தன சிற்சில சீரில சிற்சில
கவிதையை மறைத்தோம் கவிஞனைக் குறைத்தோம்
பாரதி முகத்தில் படரும் மீசையை
நறுக்குந் தொழிலில் நாம்புகல் நன்றோ?
கத்திரி வேலை காட்டுதல் தீமை
உலகம் பழிக்கும்; ஓங்குயர் கவிஞன்
கண்ணைக் குத்தும் கயமை வேண்டாம்
அவனை உணர்வோம் அவன்வழி நடப்போம்
நாடும் மொழியும் நலம்பெறச் செய்வோம்
வாழிய பாரதி வாழிய தமிழ்மொழி
வாழிய தமிழினம் வாழிய
வாழிய தமிழகம் வாழிய உலகே!

★

கூட்டுணர்ச்சி!

இளமையில் சாதாரணக் காரியங்களுக்காக ஒருவரோடு ஒருவர் போட்டுக்கொண்ட சண்டையும், மணல்வீடு கட்டி மண விழா நிகழ்த்தி மகிழ்ந்த நிகழ்ச்சிகளும் மனத்திலே தோன்றிமறைய, தன் மணக்கோலத்தைக் கண்ணுடியிற் கண்டு உள்ளம் பூரித்து நிற்கும் மங்கை உள்ளத்தின் படப்பிடிப்பு இக் கட்டுரை.

மணல் வீடுகட்டி விளையாடும் இளங் குழந்தைகளைக் காண்கிருேம். ஒருவரோடு ஒருவர் சாதிமத பேதமின்றி, உயர்வு தாழ்வு இன்றி, பொருமை வஞ்சம் சூழ்ச்சி இன்றி, ஒன்ருய்க் கலந்து விளையாடும்போது, வயது வந்த மானிடர்களைப் பார்த்து நாம் மனம் புழுங்க வேண்டி யிருக்கிறது. உள்ளத்தில் சிறிதும் களங்கமில்லாமல், மாசு மறுவற்ற மனிதராக நம்மைப் படைக்கிறது இயற்கை. ஆனல் நாம் வளர்ச்சியடைய வளர்ச்சியடைய நம்முடனே பொருமையும் வஞ்சமும் பல தீய குணங்களும் வளர்கின்றன. ஊரிலே பெரிய பணக்காரருடைய குழந்தை பிச்சைக்காரக் குழந்தையுடன் கைகோர்த்து விளையாடுவதைக் காண்கிருேம். தாழ்த்தப்பட்ட வகுப்பார் என்று நாகரிக மக்களால் ஒதுக்கிவைக்கப்பட்டவருடைய குழந்தையுடன், தன்னை உயர்ந்த சாதி என்று சொல்லிக் கொள்பவருடைய குழந்தை விளையாடுவதைக் காண்கிருேம். பெரிய உத்தியோகத்திலிருப்பவருடைய குழந்தை வேலையின்றி அலையும் மனிதருடைய குழந்தையுடன் விளையாடுவதைக் காண்கிருேம். அவர்கள் தங்களை உயர்ந்தவர்களென்ருே, தாழ்ந்தவர்கள் என்ருே, பெரும் செல்வர் என்ருே, வறியர் என்ருே எண்ணிக் கொள்வதில்லை. அது குழந்தை உள்ளம். தான் கண்களால் கண்டவற்றைச் சரியோ, தவருே, நல்லதோ, கெட்டதோ, கபடமின்றி எடுத்துரைப்பதுவும், குழந்தை உள்ளத்தின் இயல்பு.

ஆனல் தன் குழந்தை வேற்றுச்சாதிக் குழந்தையுடன் விளையாடுவதைக் கண்ட தாயோ பொறுப்பதில்லை. ஏன்? படித்துப் பட்டம் பெற்ற தந்தைகூடப் பொறுப்பதில்லை! இழிந்த சாதிக் குழந்தையுடன் நம் குழந்தை விளையாடுவதா, குடிக்கக் கூழில்லாதவருடைய குழந்தையுடன் நம் குழந்தை விளையாடுவதா, என்று தம் குழந்தையை மிரட்டி அழைத்து வீட்டிற்குள் பூட்டி வைப்பவர்களும் உளர்.

குழந்தைப் பருவத்திலிருந்து மனிதன் வளர்ச்சியடைய வளர்ச்சியடைய பல புதிய குணங்களும் நாகரிகங்களும் தெரிந்தவனுகிருன். இளம் வயதில் பெண் ஆடவரோடு கூடி விளையாடுகிருள். ஆடவர் பெண்டிர் என்ற பேதமின்றி சமமாகக் கலந்து பழகுகிருர்கள். அவர்கள் படிப்படியே வளர்ந்து பெரியவர்களாகும்போது அவர்களுடன் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்களும் வளர்கின்றன. ஆண் பொறுப்புள்ளவனுக ஆற்றல்மிக்கவனுக வளர்கிருன். சிறு வயதில் கைகோர்த்து ஆடிய ஆணும் பெண்ணும் பெரியவர்களான பின்னர் அதே பெண் அதே ஆணைக் கண்டு கூச்சப்படுகிருள். அந்த ஆடவனை நிமிர்ந்து பார்க்கவும் நாணி, ஓடி ஒதுங்கிப் பதுங்குகிருள். இளவயதில் அவனேடு கூடி விளையாண்டவற்றையும், கூரையில்லாத மணல் வீட்டில் தனித்தனி அறைகள் அமைத்து, மாப்பிள்ளை பெண் என்றும், மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டார் என்றும், மரப் பொம்மைகளுக்குப் பூச்சூட்டி, மணம் நிகழ்த்தி, மகிழ்ந்த காலத்தை எண்ணி எண்ணி, மனதுக்குள் சிரித்துக் கொள்கிருள். அவனும் இவள் எவ்வளவு இள நங்கையாய் இருந்தாள், இப்பொழுது எவ்வளவு பெரியவளாக வளர்ந்துவிட்டாள் என்று வியப்போடு அவளைப் பார்க்கிருன்.

இளவயதில் இருந்த அழகும் ஒளியும் மாறி, பருவ வயதில் வெறியூட்டும் அழகும் ஒளியும் தவழும் தங்கப் பதுமையாகி விட்ட அவளைக் கண்டு, கற்சிலையாகி விடுகிருன் அவன். அவளும் இவனுடைய இளமையையும் அகன்று விரிந்த மார்பையும், நெடிதுயர்ந்த தோள்களையும், பொலிவுற்ற உடலையும் கண்டு பூரித்துப் போகிருள்.

இளமையிலிருந்தது கூட்டு உணர்ச்சி. கூடி விளையாட வேண்டுமென்கிற உணர்ச்சி. ஆனல் இப்போது உள்ளத்தில் எழுவது பருவ வேட்கை. கூடி மகிழ வேண்டுமென்னும் ஆசை: இனிய இல்லறம் நடத்தவேண்டுமென்ற எண்ணம். இத்தகைய எழிலோவியத்தைக் கலித்தொகையில் குறிஞ்சி கலிப் பாட்டொன்று சிறப்பிக்கிறது.

சுடர்த்தொடீஇ கேளாய்
  தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற்
  சிதையா அடைச்சிய
கோதை பரிந்து
  வரிபந்து கொண்டோடி
நோதக்க செய்யும்
  சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும்
  இருந்தேமா இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன்
  எனவந்தாற் கன்னை
அடர்பொற் சிகரத்தால்
  வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ருட்டிவா
  என்றுளெனயானுந்
தன்னை யறியாது
  சென்றேன மற்றென்னை
வளைமுன்கை பற்றி
  நலியத் தெருமந்திட்
டன்னு இவனெருவன்
  செய்ததுகாண் என்றேனு
அன்னை அலறிப்
  படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கின
  னென்றேனு அன்னையுந்
தன்னைப் புறம்பழித்து
  நீவமற் றென்னைக்
கடைக்கணுற் கொல்வான்போல்
  நோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.

குழந்தைப் பருவத்தில் ஒன்ருய் விளையாடித் திரிந்த பொன்னியும், வளவனும் பருவத்தை அடைந்தனர். பருவமடைந்த பின்றை ஒருவரை ஒருவர் காணுவது எளிதன்றே. பருவமடைந்த பின் ஆண் காவலில்லாதவனுகிருன். பெண்ணைச் சுற்றிப் பெரிய முள்வேலியும் கோட்டைகளும் மதில்களுமாய்ப் பேரரண்கள் அமைகின்றன. அக்கோட்டையாகிய காவலுக்குள் சென்று அவளைக் காண்பது எளிதல்லவே. பருவத்தால் உடற்பொலிவுற்ற வளவன் பருவத்தால் கோட்டைக்குள் அகப்பட்டுக் கொண்ட பொன்னியைக் காண விழைந்தான். எனவே அவள் வீட்டு வாசலிற் போய் நின்று, "இல்லிலே உறைவோரே, உண்ணு நீர் தருவீரோ," என்ருன். இது கேட்ட பொன்னியின் தாய் "யாரோ உண்ண நீர் கேட்கிருர்கள், பொன்னி செம்பிலே நீர் கொண்டுபோய்க் கொடு" என்ருள். தாயின் சொற்படி பொன்னி செம்பிலே நீரைக் கொண்டு போனுள். அவளுடைய திருவுருவப் பொலிவைக் கண்டு மயங்கிப் போனுன் வளவன். உடற்கட்டும், மதிமுகமும் அவன் வேட்கையை மிகுதிப்படுத்தின. பொன்னி கண்களை பூமியிற் பதித்துச் சென்ருள். அஃதன்ருே தமிழ் மகட்கு அழகு. செம்பு நிறைய நீரைக் கொணர்ந்த அவள், வளவன் அருகில் வந்ததும், வளவன் நீருண்பான் போல் குனிந்து அவளுடைய வளைக்கரத்தை— மென்கரத்தை--மலர்க்கரத்தைப் பற்றி இழுத்தான். இழுத்ததும் துடிதுடித்த பொன்னி, "அம்மா இவன் செயலைப் பார்த்தாயா", என்று கூவினுள். அதனைக் கேட்ட அவளது தாய் அலறி அடித்துக்கொண்டு ஓடிவந்தாள். அதற்குள் கரம்பற்றி இழுத்தவனை நிமிர்ந்து பார்த்த பொன்னி இவன் இன்னுன் என உணர்ந்து கொண்டாள். நாணித் தலைகுனிந்தாள். பதறிய நெஞ்சத்தோடு அவள் தாய் ஓடி வந்தாள். வந்தவள் "என்ன" வென வினவினுள் பொன்னியை. அதற்குப் பொன்னி, இவன் நீருண்கையில் விக்கினுன் அதனுல் மருண்ட யான் உன்னை அழைத்தேன் என்று பொய் கூறினுள். இதனுல் வளவனும் தப்பினன். பொன்னியும் மகிழ்ந்தாள். இவ்வாறு இளவயதில் ஆடித்திரிந்த அவர்கள் உள்ளத்தில் மாருத அன்பும் பாசமும் வளர்கிறது. அது காதலாக மலர்கிறது. காதல் களவிலே தொடங்கி பிறகு கற்பாகி நிலைபெறுகிறது. இளவயதில் ஒன்ருய் விளையாடும் ஆண் பெண் குழந்தைகள் பிறகு காதலராவர் என்ற நியதியில்லை. இளமையிலேயே ஒருவரோடு ஒருவர் அன்பும் பாசமும் பரிமாறிக்கொள்ளும் பண்பினராயின் அவர்கள் காதலராவர் எனலாம்.

இளமையில் சாதாரணக் காரியங்களுக்காக ஒருவரோடு ஒருவர் போட்டுக்கொண்ட சண்டையும், மணல்வீடு கட்டி மணவிழா நிகழ்த்தி மகிழ்ந்த நிகழ்ச்சிகளும் மனத்திலே தோன்றி மறைய, தன் மணக்கோலத்தைக் கண்ணுடியிற் கண்டு உள்ளம் பூரித்து நிற்கும மங்கையின் உள்ளத்தை எவ்வாறு எழுதுவது!

—வலம்புரி எழிலன்.

★ ★ ★

குருடரும் கிழவரும்

காலமான தாமஸ் கோர் என்ற குருடர் அமெரிக்க ஸெனேட் சபையில் ஓர் அங்கத்தினராக இருந்தார். ஒக்லஹாமா டெரிட்டோரியல் கவுன்ஸில் அங்கத்தினர் ஒருவருக்கும் கோருக்கும் ஒரு சமயம் பெரிய தர்க்கம் வந்தது. கவுன்ஸில் அங்கத்தினர் கிழ ராஜதந்திரி. கிழவருக்கு மகா கோபம் வந்துவிட்டது. "இந்த மனிதர் ஒரு குருடராகமட்டும் இராவிட்டால், இவரைச் சும்மா விட்டிருக்கமாட்டேன். இந்தப் பார்வை விஷயத்தில் இவர் எனக்குச் சமமாயிருந்தால், இவரைக் கதறக் கதற மோத்தியிருப்பேன்" என்ருர்

வாலிப கோர் பதில் சொல்ல எழுந்தார். என்ன சொல்லப்போகிருரோ என்று சபையோரெல்லாம் கவலையோடு மௌனம் சாதித்தார்கள். கோர் மெல்லிய குரலில் அமைதியாக, "தலைவர் அவர்களே, இங்குள்ள யாராவது தயை செய்து கிழவனரின் கண்ணைக் கட்டிவிடக் கட்டளையிடுவீர்களா?" என்ருர்.

—லீ ஜாக்ஸன், 'யங் லைஃப்'

★ ★ ★

சிலம்பு வழங்கும் செல்வம்

இராசன்—

பன்மொழிப் புலவர்
கா. அப்பாதுரை,
எம். ஏ., எல். டி.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்த் துறைகளிலே நாடகம் தான் மனித இனத்தின் முதல் கலை என்று கூறத் தகும். நாடகப் பண்பு குன்றிக் கவிதையும், கவிதைப் பண்பு குன்றி உரை நடையும் வளர்வதையே நாம் நாகரிக சமுதாயத்தின் கலை வளர்ச்சியில் காண்கிறோம். இவ்வளர்ச்சிப் போக்கில் கலைப்பண்பு குறைந்து வரலாமாலும், கலையின இயற்பண்பு அதாவது சமுதாய அறிவுப்பண்பு மேம்படுவது காணலாம்.

நாகரிகம் குறைந்த இனங்களில் நாம் உரை நடையையோ இலக்கியத்தையோ வளமாகக் காணுதல் மிக அரிது. ஆனால் அத்தகைய இனங்களில் கூட இசையையும் நாடகத்தையும் காணமுடியும். இது இயல்பே என்னலாம். உலகின பல நாகரிக இனங்களில் நாடக இலக்கியமோ இசை இலக்கியமோ காணப்பெறாத தன காரணம் இதுவே. ஆயினும் நாகரிக முன்னேற்றத்தின் தொடக்கக் காலத்திலேயே நாகரிகம் தாண்டிக் கலை வளர்ந்த இனங்களில், நாகரிக முன்னேற்றத்துடன் முன்னேற்றமாக நாடகம் முதலிய கலைகளும் மேம்பட்டு, அப்பண்பாட்டால் நாகரிகம் இன்னும் வளம் பெறுவதுண்டு. தற்காலத் தமிழும் நாடக இலக்கிய மற்ற மொழிகளும் முன் கூறப்பட்ட வளர்ச்சி முறைக்குரிய சான்றுகள். பண்டைத் தமிழ் இலக்கியமும் இன்றைய மலையாள இலக்கியமும் நாடகப் பண்பமைந்த பிறமொழி இலக்கியங்களும் கலைப்பண்பு தழுவி வளர்ந்த நாகரிகங்களுக்குரிய சான்றுகளாகும்.

தமிழகம் சூழ்ந்த நாகரிக இனங்களிலே இன்றும் நாம் நான்கு வகையான பண்புகளை முனைப்பாகக் காணலாம். ஒன்று மலையாளம், வங்கம், பர்மா ஆகிய நாடுகளின் முனைப்பான கலைப் பண்பு. மற்றொன்று குஜராத்தி போன்ற இனங்களின் வாணிக முயற்சிப் பண்பு. மூன்றாவது ரஜபுதனம், மராட்டியம் முதலியவற்றின் வீரப்பண்பு. நான்காவது தெனாடு, கோசல நாட்டின அறிவுப்பண்பு. இந்நான்கு குழுவின பண்புகளும் நிறைவு பெற்ற இனம் தமிழகம் என்று காணலாம். தளர்ந்த நிலையிலும் தமிழகம் தன் முழு நிறைவில் குறைவுபடவில்லை.

முத்தமிழின் சிதறிய செல்வங்கள்

பண்டைத் தமிழகத்தின் முத்தமிழ் வளம் இடைக்கால தளர்ச்சி ... நவங்களால் சில கூறுகளில் தமிழகத்தில் முனைப்படைந்து எஞ்சியுள்ளது. வேறு சில கூறுகளில் தமிழகம் சூழ்ந்த இனங்களில் முனைப்பாக எஞ்சியுள்ளது. முத்தமிழின் செல்வம் இவ்வாறு இன்று சிதறிய செல்வங்களாகியுள்ளன. இதை நாம் சிலப்பதிகாரத்தின் வகையிலே காண்கிறோம். முத்தமிழ்க் காப்பியம் என்று கூறப்படும் இந்நூல் இன்று தமிழின் இயல் நூல்களுள் ஒன்றாக நம்மிடையே நிலவுகிறது. அத்துடன் சேரநாட்டின் மொழி, மலையாளமாக மாறிவிட்டதனால் அந்நூல் இன்று தமிழுக்கும் தமிழகத்துக்கும் தமிழருக்குமே உரியதாகியுள்ளது. இவ்வாறு முத்தமிழ்க் காப்பியத்தின் மொழியும் இயற்பகுதியும் தமிழுக்கு உரிமைப்பட்டு விட்டன. ஆனால் அதன் இசை நாடகக் கூறுகள் இன்றைய தமிழகத்துடனே தமிழுடனே தொடர்பற்ற பகுதிகள். தமிழகத்தை விட ஆந்திர கன்னட நாடுகளுக்கு அதனுடனுள்ள தொடர்பு மிகுதி என்னலாம். ஏனெனில் பண்டை நாடகப் பண்பு இன்னும் இயக்க கானம் (யக்ஷ கானம்) என்ற பெயருடன் உயிர்ப்பு அழியாமல் நிலவுகிறது. மலையாள நாட்டிலோ முத்தமிழின் நாடகப் பகுதி கலையுருவில் அழியாமல் நிலவுவதுமட்டுமல்ல, தொடர்ந்து வளர்ச்சியுமடைந்து வந்துள்ளது. இன்று உலகிற்கு அது முத்தமிழ் மரபில் வந்த அருங்கலைக் கூறுகளைகளியைத் தந்துள்ளது.

மலையாள நாடகத்தின் மாண்பு

மாண்ட பண்டைத் தமிழ் நாடகத்திற்கும் அகில உலக நாடகத்திற்கும் உள்ள தொடர்பை சமஸ்கிருத நாடக இலக்கியம் விளக்கிக் காட்ட உதவுகிறது. ஆனால் தமிழ் நாடகத்துடன் சமஸ்கிருத நாடகத்திற்கும் உலக நாடகத்திற்கும் உள்ள தொடர்பை மலையாள நாடக வளர்ச்சியே நமக்கு விளக்குகிறது.

இந்திய சமஸ்கிருத நாடக இலக்கியத்திற்கும் உலக நாடக இலக்கியத்திற்கும் மலையாள மொழி எந்த அளவு உயிர்க் கருவூலம் என்பதை இன்னும் மலையாள நாடே உணர்ந்து கொள்ளவில்லை. சமஸ்கிருத பக்தி மயக்கம் இங்கே தாய்மொழிக்கும் அதற்கும் உள்ள உண்மைத் தொடர்பைக் காணத் தடையாகியுள்ளது.

பாசன் நாடகங்கள்

சமஸ்கிருத இலக்கிய வளர்ச்சியில், சிறப்பாக சமஸ்கிருத நாடக இலக்கிய வளர்ச்சியில் மலையாள நாடு கொண்ட பங்கு சிறிதன்று. இதனை இருபதாம் நூற்றாண்டின் தொடக்க நிகழ்ச்சியொன்று சுட்டிக் காட்டுகிறது. திருவனந்தபுரத்தில் பழமைவாய்ந்த ஒரு குடும்பத்தினரின் பூசையறையில் வைத்துப் பூசிக்கப்பட்ட பழைய ஏடுகள் சிலவற்றை, டாக்டர் கணபதி சாஸ்திரி என்னும் பெரியார் எடுத்து வெளியிட்டார். அவை பதின்மூன்று சமஸ்கிருத நாடகங்களை உட்கொண்டிருந்தன. சமஸ்கிருத நாடகக் கவிஞன் காளிதாசனால் குறிக்கப்பட்ட பழைய நாடகக் கவிஞனான பாசன் நாடகங்கள் என்று அவை கருதப்பட்டு சமஸ்கிருத உலகெங்கும் பெருத்த ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டன. ஆனால் நாடகங்களின் மொழி, நடை, பண்பு, கருத்துக்கள் ஆகியவற்றால் அவை முற்கால நூல்களின் பிற்காலத் திரிபுகள் என்றும், அத்திரிபில் தென்னிந்திய சமஸ்கிருத நாடகப் பண்புகள் அவற்றில் பெரிதும் ஏறிவிட்டன என்றும் மேலை உலக அறிஞர் கருதினர். அவை பாசன் காலத்தவையாக (கி. மு. நான்காம் நூற்றாண்டுக்குரியவையாக) இருக்கக் கூடுமானாலும், மலையாளத்து நம்பூதிரிப்புலவர்களால் அவ்வக்காலத் திற்கிசைய மாற்றப்பட்ட வடிவிலேயே நம்மிடம் வந்துள்ளன என்று அவர்கள் கொண்டார்கள்.

சமஸ்கிருத நாடகத்தின் இலக்கியப் பண்பு இந்தியாவெங்கும் ஐந்தாம் நூற்றாண்டில் உச்சநிலை அடைந்தது. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் தளர்ச்சி அடைந்து, பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குள் நலிந்து விட்டது. ஆனால் மலையாள நாட்டில் நம்பூதிரிகள் தந்த புத்துயிர் ஊக்கத்தால் அது தொடர்ந்து ஒரு தென்னிந்திய சமஸ்கிருத நாடக மரபை வளர்த்தது. இதன் பயனாக எழுந்த புதிய சமஸ்கிருத நாடகங்கள் மிகப் பல. பாசன் நாடகங்கள் போன்ற பழைய நாடகங்களின் புதுப் பதிப்புக்களும் அவற்றிடையே உண்டு.

பல்லவரும் நம்பூதிரிகளும்

சமஸ்கிருதத்தை வளர்ப்பதற்கென்றே வாழ்ந்த ஒரு அரச மரபு இந்தியாவில் உண்டென்றால், அது காஞ்சியில் மூன்று முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை ஆண்ட பல்லவர்களே. அதுபோல சமஸ்கிருதத்தின் வளர்ச்சி ஒன்றையே தம் வாழ்க்கைத் தொழிலாகவும் வாழ்வின் இன்பமாகவும் கொண்ட ஒரு இனம் இந்தியாவில் உண்டென்றால் அது மலையாளத்து நம்பூதிரி இனமே.

மணிப்பிரவாளம் : உரையிடையிட்ட பாட்டு அல்லது 'சம்பூ' நடை

இந்தியா முழுவதும் பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து இஸ்லாமிய சமயத்தின் மொழி, இலக்கிய, கலைத்தாக்குதலால் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு தளர்ந்தது. அதே சமயம் இராமானுஜரின் வைணவ இயக்கத்தால் தாய் மொழிகள் புதுவாழ்வு பெற்று வளர்ச்சியடைந்தன. இத்தருவாயில் மலையாள நாட்டு நம்பூதிரிகள் சமஸ்கிருத நாடக அரங்கங்கள் ஏற்படுத்தி அதற்குப் புத்துயிர் ஊட்ட முயன்றனர். பொதுமக்களை அதில் ஈடுபடுத்துவதற்காக நாடகத்தின் நகைச்சுவைக் காட்சிகளில் தாய்மொழி கலந்த சமஸ்கிருத நடையை உண்டுபண்ணினர். நகைச்சுவைக்காக சமஸ்கிருதத்தில் தாய்மொழி கலந்த இந்த நடையே விரைவில் சமஸ்கிருதம் கலந்த தாய்மொழி நடையாகிய மணிப்பிரவாளம் ஆயிற்று. நம்பூதிரிப் பார்ப்பனரின் இம்முயற்சி மலையாள நாட்டிலும் தெலுங்கு கன்னட நாடுகளிலும் தாய்மொழி தமிழிலிருந்து பிரிந்து மலையாளம் முதலிய மொழிகளாகக் காரணமாயிற்று.

மணிப்பிரவாள நடை; தாய்மொழி வாழ்வைக் கெடுத்ததை விட மிகுதியாக சமஸ்கிருத இலக்கிய வாழ்வைக் கெடுக்கக் காரணமாயிருந்தது. ஏனென்றால் தாய்மொழி கலந்த சமஸ்கிருதத்திற்கும் சமஸ்கிருதம் கலந்த தாய்மொழிக்கும் வேற்றுமை இல்லாமல் இரண்டும் ஒரே மணிப்பிரவாளமாயிற்று. இது தாய்மொழியின் பழைய பண்புகளையும் சமஸ்கிருதத்தின் பழைய பண்புகளையும் ஒருங்கே அழித்து, புதியதொரு பண்பை — தாய்மொழிப் பண்பையே வளர்த்தது.

சமஸ்கிருத மொழியை வளர்க்க நம்பூதிரிகள் செய்த முயற்சி முழு வெற்றி பெறாவிட்டாலும், சமஸ்கிருத நாடகத்தின் இரு பண்புகளை அவர்கள் தம் தனிப் பண்பாக்கிக் கொண்டனர். ஒன்று மணிப்பிரவாள நடை. மற்றொன்று நாடகங்களின் மரபில் வந்த உரையிடையிட்ட பாட்டுநடை. பின்னது மலையாளத்திலும் சமஸ்கிருதத்திலும் 'சம்பூ' நடை எனப்பட்டது. இது நம்பூதிரிகளால் நாடகத்துக்குமட்டுமன்றி புதிய காவியங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. பாரதசம்பூ, இராமாயண சம்பூ என்பவை போன்ற சம்பூ காவியங்கள் இரு மொழிகளிலும் பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து பதினாறும் நூற்றாண்டுவரை நூற்றுக்கணக்கில் எழுதிக் குவிக்கப்பட்டன.

(தொடரும்)

★ ★ ★

குறும்புக் கடிதம் - குறும்புப் பதில்

1920-ஆம் ஆண்டு வாக்கில் வின்ஸ்டன் சர்ச்சில் தம் கட்சிக்காரரையும் திட்டினார்; எதிர்க் கட்சிக்காரரையும் திட்டினார். அப்போது அவருக்குப் பேர்னார்ட் ஷா ஒரு கடிதம் எழுதினார்: "என்னுடைய புதிய நாடகம் ஒன்றின் முதல் நாள் ஆட்டம் நடக்கிறது. அதற்கு இரண்டு டிக்கட்டுகள் அனுப்பியிருக்கிறேன். ஒன்று, உங்களுக்கு; மற்றது, உங்கள் நண்பருக்கு - அப்படி ஒருவர் இருந்தால்,"

தாமதியாமல் சர்ச்சில் இதற்குப் பதில் எழுதினார்; "உங்கள் புதிய நாடகத்தின் முதல் நாள் ஆட்டத்துக்கு என்னால் வர இயலாததற்கு வருந்துகிறேன். தயை செய்து இரண்டாம் நாள் ஆட்டத்துக்கு எனக்கு இரண்டு டிக்கட்டுகள் அனுப்புங்கள் - அப்படி ஒன்று நடக்குமானால்,"

—மிக்ளிங், 'க்ளீவ்லாண்ட் ந்யூஸ்

★ ★ ★

காதல் கொலை வழக்கு

நிரபராதி தண்டிக்கப்படுகிற போது எங்கோ ஒரு குற்றவாளி தப்பித்து விடுகிறான். சட்டத்திற்கு அவன் தப்பினாலும் மனச்சான்றுக்குத் தப்பமுடிவதில்லை.

பொழுது புலர்ந்தது. சூரிய வெளிச்சம் ஜன்னல்களின் வழியாக அறைக்குள் புகுந்தது. கணபதி கண்களைத் துடைத்துக் கொண்டே விழித்துப் பார்த்தான். என்றுமில்லாத புத்துணர்ச்சி அவன் உள்ளத்தில் குடி புகுந்தது. அதன் எதிரொலியாக அவன் முகம் மலர்ந்தது. உதடுகள் புன்சிரிப்பை வரவழைத்தன.

கடந்த ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இன்றுதான் அவன் முகம் பிரகாசித்தது. ஏழு ஆண்டுகளாக சிறையிலே வாடிக்கிடந்தான் கணபதி வளரும் வாலிபப் பருவத்திலேயே சிறைக்கு அனுப்பப் பட்டவன் அவன். உலகத்தின் போக்கையும், அனுபவங்களையும் கற்றுத் தேர்ந்தவனல்ல. அவன் தன்னுடைய இளமைப்பருவத்திலேயே பெற்றோரை இழந்துவிட்டான். தன்னுடைய ஒரே தங்கை சிவகாமியுடன் வேலை தேடி நாடோடியாகக் கிளம்பினான். பல இடங்களில் வேலை பார்த்தான். எதுவும் அவனுக்கு நிரந்தரமாக அமையவில்லை. அவனும், அவன் தங்கையும் பசியின்றி வாழ, அவன் பட்டபாடு கொஞ்சமல்ல. எத்தனையோ நாட்கள் இருவரும் பட்டினி கிடந்திருக்கிறார்கள். ஆனால் பட்டினி கிடப்பது பற்றி கணபதி வருத்தப் பட்டதே இல்லை. இந்த உலகத்தில் 'நல்லவர்கள்' என்ற பெயருடன் நாணயமாக வாழவேண்டும் என்பதுதான் அவனுடைய குறிக்கோள். அதற்காகவே அவன் கஷ்டப்பட்டான். அத்துடன் தன் அருமைத் தங்கை சிவகாமிக்கு எவ்விதக் கஷ்டமும் ஏற்படக்கூடாது என்பது அவனுடைய தீர்மானமாகும். கடைசியாகப் பலமுறை படையெடுத்ததன் விளைவாக, ஒரு உயர்ந்த உத்தியோகஸ்தர் வீட்டில் அவனுக்கு வேலை கிடைத்தது. தங்கைக்கும் அந்த வீட்டிலேயே வேலை வாங்கிக் கொடுத்தான். அப்போது அவனுக்கு வயது பதினேழு. தங்கைக்கு வயது பத்து.

அந்த உத்தியோகஸ்தர் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர். பெயர் வாசுதேவன். அவருக்கு ஒரே மகள்-பெயர் இன்பவல்லி. அவள் கான்வெண்ட் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தாள். அவளைக் காலையில் பள்ளிக்கூடத்திற்கு அழைத்துக் கொண்டு போவதும் மத்தியானம் அவளுக்குச் சாப்பாடு எடுத்துச் செல்வதும், மாலையில் அவளை வீட்டிற்கு அழைத்து வருவதும் கணபதியின் முக்கியமான வேலைகள். மற்ற நேரங்களில் இன்பவல்லியின் அறையைப் பெருக்கி சுத்தம் செய்து வைப்பான்: வாசுதேவன் அறையை சுத்தம் செய்வான். மேஜைகளைத் துடைப்பான். புத்தகங்களை ஒழுங்காக அடுக்கிவைப்பான். அவருடைய 'பூட்சு'களுக்கு 'பாலிஷ்' போட்டு துடைத்து வைப்பான். மற்ற நேரங்களில் தோட்டவேலைகளைக் கவனிப்பான். இதுதான் அவனுடைய தினசரி வேலைகள். சிவகாமி, வாசுதேவன் மனைவிக்கு உதவியாக சமையல் வேலைகளைக் கவனிப்பாள். காய்கறி வாங்கி வருவாள், தண்ணீர் எடுப்பாள், பாத்திரம் தேய்ப்பாள், துணி துவைப்பாள். இதுதான் அவளுடைய வேலைகள்.

ஒழுங்காக ஓடிக்கொண்டிருந்த கணபதியின் வாழ்க்கையில், குறுக்கே புகுந்தாள் இன்பவல்லி. இன்பவல்லிக்கு வயது பதினைந்து இருக்கும். அடிக்கடி சினிமாவுக்குப் போவாள். பெற்றோர் வராவிட்டால் கணபதியை துணைக்கு அழைத்துச் செல்வாள். காதல் கதைகளை விடாமல் படிப்பாள். பருவகாலத்திற்கு அடியெடுத்து வைக்கும் இன்பவல்லியின் மனம் தன்னோடு நெருங்கிப் பழகும் கணபதியை விரும்பியது. அதை அவனிடம் சொல்லவும் முடியாமல், ஆசையை அடக்கவும் முடியாமல் தவித்தாள். தான் பார்க்கும் சினிமாப் படங்களை அவனுக்கு விளக்குவாள். தான் படிக்கும் காதல் கதைகளை அவனுக்குச் சொல்லுவாள். சலனமற்றுக் கிடந்த அவன் மனதிலே சிறிது சிறிதாகக் காதல் தீபத்தை ஏற்றினாள்- தெளிந்த நீரோடை போன்ற அவன் மனதைக் கலக்கிவிட்டாள். இரும்பு போன்ற அசைக்கமுடியாத அவன் மனதை காந்தக்கண் வீச்சால் அசைத்துவிட்டாள். கணபதியின் மனம் பேதலித்தது. தன்னையறியாமலே இன்பவல்லிமீது காதலானான் கணபதி.

காலம் ஓடிக்கொண்டிருந்தது. ஆண்டுகளும் இரண்டு மறைந்தன. கணபதியும் இன்பவல்லியும் இனை பிரியாத காதலர்களாகிவிட்டனர். அவர்கள் சந்திப்பதற்குத் தடை எதுவும் இல்லை. அதனால் அவர்களுடைய காதலும் தடைப்படவில்லை.

ஒருநாள் இரவு முழுமதி வானத்தில் காய்ந்துகொண்டிருந்தது. வாசுதேவன் கொலை நடந்த ஒரு இடத்திற்கு விசாரணை செய்ய அவசரமாகச் சென்றிருந்தார். திரும்பிவர நள்ளிரவு ஆகும் என்பது இன்பவல்லிக்கும் கணபதிக்கும் தெரியும். இரவு பத்து மணியானதும் படுத்திருந்த இன்பவல்லி எழுந்து பார்த்தாள். அவளுடைய தாய் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். சத்தம் போடாமல் எழுந்து, கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்

க. நாராயணன்

தாள். தாழ்வாரத்தில் கணபதியும் சிவகாமியும் படுத்திருந்தனர். அவனுடைய பாதத்தில் மெதுவாகச் சுரண்டினாள். அவன் விழித்துக்கொண்டான். அவனுடைய கையைப் பிடித்துத் தூக்கினாள். அவன் எழுந்தான். இருவரும் தோட்டத்தில் பூஞ்செடிகளுக்கிடையே கட்டப்பட்ட 'சிமெண்ட் பெஞ்சியில்' வந்தமர்ந்தார்கள். ஏதேதோ பேசினார்கள், சிரித்தார்கள். முழுமதியின் ஒளியும், சிலுசிலுப்பான தென்றலும் ஆடி அசையும் மலர்களும் அவர்களுக்கு வெறி ஏற்றிக்கொண்டிருந்தன.

இன்பவல்லியின் தாய் திடீரென்று விழித்துக்கொண்டாள். பக்கத்தில் படுத்திருந்த மகளைப் பார்த்தாள், அவள் காணப்படவில்லை. அவளுடைய மனம் திடுக்கிட்டது. எழுந்து வந்தாள். கதவு திறந்திருந்தது. தாழ்வாரத்தில் சிவகாமி மட்டும் படுத்திருந்தாள். எங்கிருந்தோ வளையல் ஒலியும் சிரிப்புச் சப்தமும் கேட்டது. தோட்டத்தின் பக்கம் சென்றாள். அங்கே அவள் கண்ட காட்சி அவளைத் திடுக்கிடச் செய்தது.

''இன்பவல்லி'' என்று அழைத்தாள். காதலர்கள் திடுக்கிட்டனர். கணபதி ''சரே''லென்று பாய்ந்து அப்பால் சென்றான். ஒன்றுமறியாதவள்போல் இன்பவல்லி தாயின் அருகில் சென்றாள். ''உன்னுடன் பேசிக்கொண்டிருந்தது கணபதி தானே?'' என்று கேட்டாள் தாய், இன்பவல்லி இக்கேள்வியை எதிர்பார்க்கவில்லை. பதில் சொல்ல முயன்றாள். ஆனால் முடியவில்லை ''எங்கே அவன்? கணபதி!'' என்று கூப்பிட்டாள். கலவரம் நிறைந்த முகத்துடன் அங்கு வந்தான் கணபதி. ''இந்த நேரத்தில் உனக்கு இங்கே என்ன வேலை? சரி! ஐயா வரட்டும் உன்னைப் பேசிக்கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, இன்பவல்லியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வீட்டிற்குள் சென்றாள் அவள்.

கதவு 'படீ'ரென்று சாத்தப்பட்டது. எஜமானியின் கோபம் அத்துமீறி விட்டதை உணர்ந்தான் கணபதி. உள்ளே கோபத்தில் அவள் பேசிக்கொண்டிருப்பதை ஒட்டுக் கேட்டான் கணபதி. இன்பவல்லியின் விம்மலும் விக்கலும் அவனுக்குத் தெளிவாகக் கேட்டன.

அப்போதுதான் அவனுடைய தவறும் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. இனி இன்பவல்லியைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை, என்று முடிவு செய்தான். தூக்கம் வராமல் புரண்டு படுத்தான். பிறகு தூங்கிவிட்டான். மறுநாட் காலை கண்விழிக்கும் போது முதல் நாளிரவு நடந்த சம்பவங்கள் அவனுடைய நினைவுக்கு வந்தன- ஆனால் நல்ல வேளையாக வெளியே போன எஜமான் இன்னும் வீட்டிற்குத் திரும்பவில்லை என்பதைத் தெரிந்துகொண்டான்.

இன்பவல்லியின் தாய், கணபதியை அழைத்தாள். ''நேற்று நடந்த சம்பவம் நேற்றோடு போகட்டும். இதை நான் எஜமானிடம் சொன்னால் உன்னைக் கொன்று இங்கேயே புதைத்து விடுவார். ஆனால், நான் அவரிடம் இதைச் சொல்லாமலிருக்கிறேன். இனி உன் தங்கை சிவகாமி இன்பவல்லியுடன் பள்ளிக்கூடம் போய் வருவாள். அதற்குப் பதிலாக நீ காய்கறி வாங்கவேண்டும். தண்ணீர் தூக்க வேண்டும். இரவில் நீங்கள் இங்கே தங்கக்கூடாது. உங்களுக்கு வாடகைக்கு ஒரு வீடு பார்த்துத் தருகிறேன். அதற்குள்ள வாடகையையும் நானே கொடுத்துவிடுகிறேன், இரவு ஒன்பது மணிக்கு நீங்களிருவரும் வீட்டிற்குப் போய்விடுங்கள். காலையில் வேலைக்கு வந்தால் போதும். இனி நீ இன்பவல்லியைப் பார்க்கவும் கூடாது; அவளுடன் பேசவும் கூடாது! தெரிந்ததா?'' என்றாள். கணபதி தலையசைத்தான். அப்போது அங்கே வந்த இன்பவல்லியின் முகம் அழுது அழுது வீங்கிப்போயிருந்தது. கண்கள் சிவந்திருந்தன. அவனைப் பரிதாபத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள்: அவனும் பார்த்தான். ஆனால் மறு விநாடியே எஜமானியம்மாளின் சொற்கள் அவனை எச்சரித்தன. உடனே தன் வேலையைப் பார்க்கச் சென்றுவிட்டான்.

இன்பவல்லியைச் சந்திப்பதே கணபதிக்கு அருமையாகிவிட்டது. அவளுடன் பேசி ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. தன் தங்கையிடம் இன்பவல்லியைப் பற்றிக் கேட்பான். இன்பவல்லியும் கணபதியைப் பற்றி சிவகாமியிடம் விசாரிப்பாள். இப்போது சிவகாமி இருவருக்கும் தூதுபோனாள். வீட்டிலே சட்டதிட்டம் அதிகமாகியது. இன்பவல்லியின் பின்னாலேயே அவளுடைய தாய் சுற்றிக்கொண்டிருந்தாள். இன்பவல்லி வெளியே சென்றால் கணபதி வீட்டில் வேலை பார்க்க வேண்டும். கணபதி வெளியே சென்றால், இன்பவல்லி வீட்டிலிருப்பாள். பள்ளி விடுமுறை நாட்களில்கூட இருவரும் சந்திக்க முடியாதபடி இன்பவல்லியின் தாய் கண்ணும் கருத்துமாக தன் மகளைப் பாதுகாத்து வந்தாள்

ஆனால் சிவகாமியின்மூலம் இருவரும் கடிதங்கள் பரிமாறிக்கொண்டனர். இருவரும் ஒருவரை விட்டொருவர் பிரிவதில்லையென்றும், அப்படி வாழ்க்கையில் பிரியும்படி நேர்ந்தால் இருவரும் தங்கள் உயிர்களைப் போக்கிக்கொள்வதென்றும் முடிவு செய்துகொண்டார்கள். ஆனால், இருவரும் தனிமையில் சந்தித்து மனம்விட்டுப் பேச நினைத்தார்கள். அந்த நாளை இருவரும் ஆவலுடன் எதிர்நோக்கினார்கள்.

இதற்கிடையே இன்பவல்லியின் திருமணப் பேச்சு எழுந்தது வாசுதேவனும் அவருடைய மனைவியும் ஒரு மாப்பிள்ளையை நிச்சயித்தனர். ஆனால், இன்பவல்லியின் சம்மதத்தையும் தெரிந்து கொள்வதற்காக அந்த மாப்பிள்ளையை தங்கள் வீட்டிற்கு அழைத்தனர்.

அவன் பி. ஏ. படித்த மாப்பிள்ளை. வாசுதேவனுக்குச் சொந்தக்காரன். அவனைப் பார்த்தாள் இன்பவல்லி. தன் இதயத்திலே குடிபுகுந்த கணபதிக்கு அவன் ஈடில்லாதவனாக, அவள் கண்களுக்குத் தென்பட்டான். கணபதி அதிகம் படிக்காவிட்டாலும் நல்ல அழகன். உறுதியான உடற்கட்டு வாய்ந்தவன். எப்போதும் சிரித்த முகம். சுறு சுறுப்பாக வேலை செய்பவன். அன்பொழுகப் பேசுபவன். அவன் எங்கே? இந்தப் பி. ஏ. எங்கே?

இன்பவல்லியின் சம்மதத்தைக் கேட்டனர் பெற்றோர்கள். தனக்குக் கல்யாணமே வேண்டாமென்று மறுத்துவிட்டாள் இன்பவல்லி. வாசுதேவன் அவளை மிரட்டினார். அந்த வரனையே கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டார். ஆனால், அவளுடைய தாய்க்கு உண்மை விளங்கிவிட்டது. ''கணபதியை வீட்டைவிட்டு விரட்டிவிட்டால் மகள் இணங்கிவிடுவாள்'' என்று தன் கணவனிடம் சொன்னாள். ஒருநாள் தான் கண்ணால் பார்த்த விஷயத்தையும், அதன் பிறகு தான் செய்த ஏற்பாடுகளையும் வாசுதேவனிடம் விளக்கினாள். இதைக் கேட்டதும் வாசுதேவனுக்குக் கோபம் குமுறி எழுந்தது. கணபதியைத் தன் அறைக்குக் கூப்பிட்டார். அவன் உள்ளே வந்ததும் கதவை அடைத்துக்கொண்டார். உள்ளே இருந்து ''ஐயோ'', ''அம்மா'' என்று கணபதி அலறிக் கூச்சலிடும் சப்தம் இன்பவல்லிக்கு நன்றாகக் கேட்டது. ஒவ்வொரு தடவையும் அவன் கூச்சலிடும்போதெல்லாம் அவள் மெய்சிலிர்த்தது. புல்லரித்தது. நடுங்கினாள். அழுதாள்.

கடைசியில் கதவு திறக்கப்பட்டது. கணபதி வெளியே வந்தான். உட

லெங்கும் தடிப்புகள், காயங்கள். சில இடங்களிலிருந்து இரத்தம் பெருகி அவன் உடையை நனைத்திருந்தன. இந்த அலங்கோலத்தை நேரில் கண்ட இன்பவல்லி மூர்ச்சையாகிக் கீழே விழுந்தாள்.

கணபதிக்கு இப்போது வேலையில்லை. வாசுதேவன் வீட்டுப்பக்கம் அவன் அடி எடுத்து வைப்பதுமில்லை. சிவகாமியும் வேலையிலிருந்து நீக்கப்பட்டாள். ஆனால், அவனுக்குப் பல 'பெரிய' மனிதர்களைத் தெரியும். கணபதி நல்ல வேலைக்காரன், நாணயமுள்ளவன் என்பதை அவர்கள் அறிவார்கள். அதனால் மிகவும் முயற்சி செய்ததின் பேரில் அவனுக்கு ஒரு 'பெரிய' இடத்தில் 'ஆபீஸ்' பையனுகை வேலை கிடைத்தது. அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அவனும் அவன் சகோதரியும் வாழ்ந்து வந்தனர்.

சுமார் ஆறு மாதங்கள் கடந்தன. கணபதி இன்பவல்லியை மறந்துவிட முயற்சித்துக் கொண்டிருந்தான். அப்போதுதான் அவனுக்கு ஒரு முக்கியமான கடிதம் வந்தது. அதை இன்பவல்லியே எழுதியிருந்தாள். இன்னும் இருதினங்களில் திருமணம் நடைபெறப் போவதாகவும், இத்திருமணத்திற்கு, தான் விருப்பம் தெரிவிக்கவில்லையென்றும், கணபதி இல்லாத வாழ்வு தனக்குக் கானல்நீர் போலவும், அதனுல் அன்றிரவே தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொள்ளப்போவதாகவும் எழுதியிருந்தாள். இக்கடிதத்தைப் பார்த்த அவன் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. எப்படியாவது அவளைத் தடுக்க நினைத்தான். அவள் உயிரைப் போக்கிக் கொள்வதை அவன் விரும்பவில்லை. சிவகாமியிடம் அக்கடிதத்தைப் பத்திரப் படுத்திவைக்கும்படி சொல்லிவிட்டு வெளியே சென்றுன். ஆனுல் அன்று இரவு முழுவதும் அவன்வீடு திரும்பவில்லை. மறுநாளும் திரும்பவில்லை. சிவகாமிக்குப் பயம் ஏற்பட்டது. ஏதோ விபரீதம் நிகழ்ந்ததாக நினைத்தாள்.

கணபதி வேலை செய்த இடத்தில், அவனுடன் வேலை பார்த்த ஒருவன் அங்கே வந்தான். "சிவகாமி! உன் அண்ணன்,வாசுதேவன் மகள் இன்பவல்லியைக் குத்தி, அவள் கழுத்திலே சுருக்கிட்டு தூக்கிலிட்டதாகவும், அதனுல் கணபதியைக் கைது செய்து சிறையிலடைத்திருப்பதாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. இன்று வழக்கு விசாரணை நடைபெறப் போகிறது" என்றுன். சிவகாமி அலறி அடித்துக்கொண்டு நீதிமன்றத்திற்கு ஓடினுள்.

அங்கே கணபதி குற்றவாளியாகக் கைதிக்கூண்டில் நின்றுகொண்டிருந்தான். தாங்கமுடியாத துயரத்தால் "அண்ணு!" என்று அலறினுள். சகோதர வாஞ்சையால் துக்கமும் துயரமும் அவனைத் தாக்க, "சிவகாமி" என்று கதறினுன் கணபதி.

வழக்கு பல தவணைகளில் நடைபெற்றது. கணபதி, தான் குற்றவாளியல்லவென்றும், இன்பவல்லிக்கும் தனக்குமிடையே காதல் உண்டு என்றும் சொல்லி அவள் எழுதிய கடிதங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தான். அவனுல் வக்கீல் வைத்து வாதாட முடியவில்லை. அதனுல் அரசாங்கத்தார் அவனுக்காக வாதாட ஒரு வக்கீலை ஏற்பாடு செய்தனர். இன்பவல்லி தன் உயிரைப் போக்கிக்கொள்ளாமலிருக்க அவளைத் தடுக்கவே தான் சென்றதாக கணபதி வாக்குமூலம் கொடுத்தான். அப்படிச் சென்றபோது தன்னைப் பிடித்து, ஒரு அறையில் கட்டிவைத்து அடித்து, பல காகிதங்களில் பல மாதிரியாக எழுதச் செய்து கையெழுத்து வாங்கிக்கொண்டதாகவும் அவனுடைய வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தான்.

ஆனுல்,வாசுதேவன் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர். ஆனதால் வழக்கு அவர் பக்கமே சாதகமாக மாறும் போலிருந்தது. ஏராளமான சாட்சியங்கள் கணபதியை ஒரு கொலையாளியாக நிரூபித்தன. கடைசியாக இன்பவல்லியை நீதிமன்றத்திற்கு அழைக்கும்படியும் அவளிடம் சில கேள்விகள் கேட்க விரும்புவதாகவும் கூறினுன் கணபதி.

மறு தவணையில் இன்பவல்லி நீதிமன்றத்திற்கு வந்தாள். இவ்வழக்கு பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டதால் ஏராளமான மக்கள் இன்பவல்லியைப் பார்க்கவும் அவளைக் கணபதி குறுக்கு விசாரணை செய்யப் போவதைக்கேட்கவும் கூடியிருந்தனர். தனக்கு எழுதிய காதல் கடிதங்கள் அனைத்தையும் படித்து, அவள் தனக்கு எழுதியது உண்மையா என்று கேட்டான் கணபதி.

★ ★ ★

மூன்று மோசங்கள்

குதிரைமேலேறி பந்து விளையாடும்போது குதிரையிலிருந்து கீழே விழுவதும், காலில் செருப்பு மாட்டிக்கொண்டு படுத்து உறங்கப் போவதும், மாமியார் இருக்கும் பொழுது காதல் பாட்டுக்களைப் பாடுவதும் மோசமானவை.

—சீனக்கவி லீ ஈ—ஷான்.

★ ★ ★

கணபதியை நீதிமன்றத்திலாவது சந்திக்கலாம் என்ற ஆவலில் வந்தாள் இன்பவல்லி ஆனுல், வாசுதேவன் அவளைப் பயமுறுத்தியிருந்தார். கணபதியை எக்காரணத்தைக்கொண்டும் நிமிர்ந்து கூடப் பார்க்கக்கூடாதென்றும், கேட்கும் கேள்விகளுக்கு வழக்குக்குப் பாதகம் ஏற்படாமல் பதில் சொல்லும்படியும் சொல்லியிருந்தார். அதனுல் கணபதியை அவள் ஏறிட்டும் பார்க்கவில்லை. அந்தக் காதல் கடிதங்களைத் தான் எழுதவில்லை என்றும், அது தன் கையெழுத்தல்லவென்றும் கூறிவிட்டாள். தான் தனிமையில் இருக்கும்போது, தன்னுடன் ஓடிவந்துவிடும்படி கணபதி வந்து பயமுறுத்தியதாகவும், தான் மறுக்கவே தன்னைக் குத்திவிட்டு, வாயில் துணியை வைத்து அடைத்ததாகவும் இன்பவல்லி தெரிவித்தாள்.

இன்பவல்லியின் வாக்குமூலத்தைக் கேட்டு வாசுதேவன் பூரிப்படைந்தார். கணபதி மனம் குமுறினுன். நீதிபதி தீர்ப்பை ஒத்திவைத்தார். மறுதவணையில் கணபதிக்கு ஏழுவருடச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார் நீதிபதி. தண்டனை கேட்டு சிவகாமி 'கோ'வென்று கதறினுள். தன் ஆருயிர்த் தங்கையை அபலையாக விட்டுச் செல்வதை நினைத்துக் கண்ணீர் பெருக்கினுன் கணபதி.

வயது இருபது நிறைவதற்குள் இந்த உலகத்தின் போக்கையும், நியாய அநியாயங்களையும் ஓரளவு புரிந்துகொண்டான் கணபதி. பருவ காலத்தில் இந்த உலகத்திலிருந்து இன்பதுன்பங்களை அநுபவிக்க முடியாமல் அநியாயமாகச் சிறைக்கு அனுப்பப்பட்டான் அவன்.

இப்போது ஏழு ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. அவனுடைய வாழ்விலே ஒரு பகுதி அநியாயமாகச் சிறையில் கழிந்துவிட்டது.

இன்றுதான் அவனுக்கு விடுதலை. அதைத்தான் அவன் உற்சாகமாக எதிர்பார்த்தான். சிறை வார்டர் வந்தான். அவனை வெளியில் அழைத்துச்சென்றுன். அவன் உழைத்துச் சேர்த்த ரூபாய் ஐம்பது அவனிடம் கொடுக்கபபட்டது. அதை எடுத்துக்கொண்டு வெளியில் நடந்தான் அவன்.

அவனுக்கு முன்னுல் இரு பெரும் வேலைகள் எதிர்நோக்கி நின்றன. தன் தங்கை சிவகாமியைத் தேடிப் பார்க்க வேண்டும். இன்பவல்லி எங்கிருந்தாலும் அவளைக் கண்டு பழிதீர்த்துக் கொள்ள வேண்டும். இதே சிந்தனையுடன் நடந்தான் கணபதி. ஏழு ஆண்டுகள் கடந்துவிட்டதால் அவனைப் பலர் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. நேராக வாசுதேவன் வசித்துவந்த பங்களாவிற்குச் சென்றுன்.

அங்கே வேறு யாரோ குடியிருந்தார்கள். அவர்களிடம் விசாரித்தான். வாசுதேவன் ஆறு ஆண்டுகளுக்கு முன்பே ஹைதராபாத்துக்கு மாற்றப்பட்டுவிட்டதாகவும், அவருடைய மகள் இன்பவல்லி அடுத்த தெருவில் வசிப்பதாகவும் கூறினுர்கள். வாசுதேவனைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. பொய்க் குற்றம் சாட்டி, தன்னை அநியாயமாகச் சிறைக்கு அனுப்பிய இன்பவல்லியைச் சந்திக்கவே அவன் விரும்பினுன்.

இன்பவல்லியின் வீட்டிற்கு முன்னுல் வந்தான். இடுப்பிலே சொருகப்பட்டிருந்த கத்தியிருக்கிறதா என்பதை ஒருமுறை கையினுல் தடவிப் பார்த்துக்கொண்டான். வீட்டின் முன்புறம் ஒரு இளைஞர் இரண்டு குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்தார். அவர்தான் இன்பவல்லியின் கணவர் என்றும், குழந்தைகள் அவர்களுடையவைதான் என்றும் தீர்மானித்தான். தைரியமாக உள்ளே சென்றுன்

"எங்கே இன்பவல்லி?" என்று அந்த இளைஞரிடம் கேட்டான். "உள்ளேதான்! நீங்கள் யார்?" என்று அன்புடனும் ஆச்சரியத்துடனும் கேட்டார் அந்த இளைஞர். "நான் யாராயிருந்தால் உனக்கென்ன? நீ ஒரு பேடி! இல்லையானுல் அவளைக் கல்யாணம் செய்துகொண்டிருப்பாயா? உன் மனைவி நடத்தை தவறியவள் என்பது உனக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனுல், இந்த ஊர் உனக்குச் சொல்லவில்லையா?" என்று சத்தம் போட்டான் கணபதி. அந்த இளைஞர் திகைப்படைந்தார். கணபதியை ஒரு பைத்தியக்காரன் என்றே எண்ணினுர்.

"என் மனைவி யார் என்பது உனக்குத் தெரியுமா?" என்று அமைதியுடன் கேட்டார் அந்த இளைஞர். "தெரியாமலென்ன? அந்த வாசுதேவன் மகள் இன்பவல்லிதான்" என்றுன் கணபதி அலட்சியமாக. அதைக் கேட்டு அந்த இளைஞர் சிரித்தார். அப்போது வாசற்புறம் ஒரு பெண் வந்தாள் இரண்டு குழந்தைகளும் வந்த பெண்ணை நோக்கி 'அம்மா' என்று சொல்லிக்கொண்டே ஓடி, அவளைக் கட்டிக்கொண்டன

"என்ன இங்கே? யார் இவர்?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

"இந்த வேடிக்கையைக் கேட்டாயா சிவகாமி?" என்றுர் அந்த இளைஞர். திகைப்படைந்த கணபதி திரும்பிப் பார்த்தான். சிவகாமியும் பார்த்தாள். "அண்ணு!" என்று அலறினுள் சிவகாமி. 'சிவகாமி!" என்றுன் கணபதி. இருவர் கண்களிலும் நீர் நிறைந்தது.

இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டே வெள்ளையுடை உடுத்திய இளம்பெண்ணொருத்தி அங்கே வந்தாள். அவள் உடலிலே நகையில்லை. தலையிலே புஷ்பமில்லை. நெற்றியிலே திலகம் இல்லை. சோகமே உருவெடுத்த அந்தப் பெண், கணபதியை, கண்ணீரைப் பெருக்கிக்கொண்டே பார்த்தாள். அவனும் பார்த்தான். "இன்பவல்லி!" என்று அழைத்தான் கணபதி. அவள் தாங்கமாட்டாத துயரத்துடன் அவன் காலடியில் வந்து வீழ்ந்தாள்.

"அண்ணு! நீ சிறை சென்ற பிறகு யாருக்கும் தெரியாமல் எனக்கு அடிக்கடி ரூபாய் கொடுத்து என்னை ஆதரித்தது அண்ணிதான். இவர்களுடைய அப்பாவின் வேண்டுகோளின்படி அவர் குறிப்பிட்ட வரனையே மணக்கச் சம்மதித்தார்கள், திருமணம் நடந்து சில நாட்களுக்குப் பிறகு மாப்பிள்ளை வீட்டார் இவர்களை வந்து அழைத்துப் போனுர்கள். சாந்திமுகூர்த்தத்தன்று மாப்பிள்ளை இறந்துவிட்டார், ஆம், அண்ணிதான் பழி வாங்கிவிட்டார்கள். அத்துடன் அந்த மாப்பிள்ளையின் சொத்துக்கும் எஜமானியாகி விட்டார்கள். இவர்களுடைய பெற்றோர் தங்களுடன் வந்து வசிக்கும்படி அழைத்ததற்கும் வர மறுத்துவிட்டார்கள், பிறகு என்னை இங்கே அழைத்துவந்து, இதோ நிற்கும் இந்த மாப்பிள்ளைக்குத் திருமணம் செய்துவைத்தார்கள். இந்த இரு குழந்தைகளும் உங்களுடைய மருமக்கள் தான். இப்போதெல்லாம் இவர்களை "அண்ணி" என்றுதான் நான் அழைக்கவேண்டும். இதுதான் அவர்களுடைய அன்புக்கட்டளை" என்றுள் சிவகாமி.

கணபதி இன்பவல்லியை வாரி எடுத்தான். அவள் முகத்தை நிமிர்த்தினுன், அவன் கண்களிலிருந்து வழிந்த இரண்டு சொட்டுக் கண்ணீர் அவள் முகத்தில் விழுந்து தெறித்தது.

திருக்கோட்டியூர் பஞ்சாயத்துப் போர்டு

இவ்வூர் பஞ்சாயத்துப் போர்டு அங்கத்தினர்கள் 2-11-55 அன்று மாலை 5-மணிக்கு மக்கள் முன்னிலையில் பதவி உறுதியெடுத்துக்கொண்டார்கள். திரு. பாலுச்சாமி தலைவராகவும், திரு. தெட்சணுமூர்த்தி துணைத் தலைவராகவும், திரு. பக்கிரி, திரு. பெரியசாமி, திரு. ஆறுமுகம், திரு. அமாவாசி, திரு முத்தழகு ஆகிய ஐவர் அங்கத்தினர்களாகவும் பதவியேற்றுர்கள், அது போது பள்ளி ஆசிரியர் திரு. சாமுவேல் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினுர். பல சங்கங்களிலிருந்தும் தி. மு. க. கிளையிலிருந்தும் தலைவருக்கும் துணைத்தலைவருக்கும் மலர் மாலைகள் சூட்டப்பட்டு வாழ்த்துப் பத்திரங்களும் வாசிக்கப்பட்டன. தேர்தல், எந்தவிதப் போட்டியுமின்றி உறுப்பினர்கள், தலைவர், துணைத் தலைவர் அத்தனைபேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

"கதிரவனுக்குத் தடை விதித்துக் கணவனைக் காத்தாள் நளாயினி" என்கிறார்கள். அதற்கோர் சவால்...........ஓர் ஆங்கிலக் கவிதையின் தழுவல்

தொத்துங்கிளி

தீபாவளித் திருநாள்!

வீடெல்லாம் தீபாலங்காரம்! தெரு முழுதும் திருவிழாக் கோலம்! பஜனைக்கச்சேரி! பட்டாசு முழக்கம்! சாந்திக்கு இது பெருந்தொல்லையாக இருந்தது. பார்ப்பன குலத்திலே பிறந்திருந்தாலும், பாரிஸ் நகரில் படித்து, பட்டம் பெற்றவளல்லவா! அவளுக்கெப்படி இப்பேர்ப்பட்ட வேடிக்கை, விநோதங்களெல்லாம் பிடிக்கப்போகிறது! கற்றவற்றை நடைமுறைக்குப் பயன்படுத்திக்கொள்வதற்கான துணிவு அவளுக்கில்லை என்றாலும் புதுமை இலக்கியங்களைப் படித்தவளாயிற்றே சாந்தி! பெற்றோரின் தொந்தரவுக்கு அஞ்சி புத்தாடை உடுத்தி, வீட்டுப் பலகணியிலே நின்றாள். வானத்துத் தாரகைகள் பூமிக்கு வந்திறங்கி மாநாடு கூடினவோ என்று எண்ணிடும் வகையில் மின்விளக்குத் தோரணங்கள் கண்களைப் பறித்தன.

"சாந்தி!" வக்கீல் விசுவநாத சாஸ்திரி கூப்பிட்டார்.

"அப்பா!"

"என்ன இருந்தாலும் இந்தியா, இந்தியாதான்! பாரிசிலே இப்படி ஒரு திருநாள் உண்டோ? இப்படிப்பட்டத் புண்ணிய திருநாள் அங்கே ஏது? எல்லாம் அப்படி இப்படி என்று தானிருக்கும்! இல்லையா மகளே!"

"ஆமாம், எல்லாம் அப்படி இப்படி என்று தானிருக்கும், ஆனல் நம் நாட்டில் உள்ளதுபோல பைத்தியக்காரத்தனமான திருநாட்கள் அங்கே ஏது அப்பா! அரசியலும் இலக்கியமும் சம்பந்தப்பட்ட திருநாட்கள் தான் பாரிசிலே அதிகம். இப்படியா? தீபாவளி! கோகுலாஷ்டமி! சேச்சே! இதை நான் அடியோடு வெறுக்கிறேன் தந்தையே!"

"அபச்சாரம்! அபச்சாரம்!! சொல்லாதே சாந்தி! நாமா அப்படிச் சொல்லுவது? நரகாசுரன் செத்தநாளைக் கொண்டாடுவதையா கூடாதென்கிறாய்? மறுபடியும் சொல்லாதே! நமக்கெல்லாம் தீபாவளிதானே புண்ணியதினம்! அதோ தெருவைப் பார்! என்ன அலங்காரம். இன்று இரவு நளாயினி கதை நடத்தப்போகிறார்கள். புண்ணியவதியின் வரலாற்றைக் கேட்கவேண்டுமே சாந்தி? கணவனே கதியென்று கிடந்த கற்பின் செல்வியின் சரிதமாச்சே அது! வா. போகலாம்.

"நானா? சிரிப்பாங்கப்பா! கடல்கடந்து போய் படித்துப் பட்டம் பெற்றவள் நளாயினி கதை கேட்க வந்தால் சிரிக்கமாட்டார்களா அப்பா!"

"படிப்பு வேறு, தொழில் வேறு, குல அனுஷ்டானங்கள் வேறு மகளே! வா, எட்டிநின்றே கேட்டுவிட்டு வரலாம்!"

"இல்லையப்பா! இங்கிருந்தே கேட்கிறேன். அதோ மேளச்சத்தம்! நன்றாகக் கேட்கிறது. நீங்கள் போய்வாருங்கள் அப்பா!"

விசுவநாத சாஸ்திரிக்கு சாந்தியின் பதில் சஞ்சலத்தைக்கொடுத்தது. என்றாலும், மகள் பட்டதாரி என்ற பெருமையில் அதை மறந்துவிட்டார்.

அன்றிரவு நளாயினி கதை புகழ்பெற்ற பாடகர் ஒருவரால் பாடப்பட்டது. பட்டுப்புடவைப் பெண்கள், மொட்டைத்தலைக் கைம்பெண்கள் அத்தனைபேரும் தேனீக்களாக அங்கே மொய்த்துக்கிடந்தனர். பலகணியிலே நின்று கவனித்துக்கொண்டிருந்த சாந்திக்கு இந்த நிகழ்ச்சிகளெல்லாம் வேடிக்கையாகவும், கேலிக்குரியதாகவும் இருந்தது.

"தாசி வீட்டுக்கு கணவனைத் தூக்கிக்கொண்டு போனாளாம்! காலையிலே சூரியோதயமாகக் கூடாதென்று கட்டளை இட்டாளாம்! இவள் கற்புத் தெய்வமாம்! கணவனுக்கு அவள் தொத்துங்கிளியாம்!" சாந்தியின் உள்ளம் இப்படி நினைத்தது.

நளாயினி கதை தொடர்ந்து நடந்துகொண்டு தானிருந்தது. ஆனல், சாந்தியின் காதுகள் செவிடாயின சிலையானாள்.

மன்னன் அவை புகுந்தான். சற்றுநேரம் பொறுத்து இளம்பெண்ணொருத்தி அங்கு வந்தாள்.

"என்ன பெண்ணே? எங்கே வந்தாய்?"

"கணவனைக் காபாற்றக் காவலன் பேரவை புகுந்த அபலைமன்னா?"

"கணவனா? யாரவன்? யாரால் அவனுக்குத் தீங்கு? சொல்! இயன்றன. செய்வோம்."

"மன்னியுங்கள் வேந்தே! தங்களால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர் என் கணவர்!"

"ஆ! அந்தக் கொடியவனா? அவனது மனைவியா நீ? போ! என் முன் நில்லாதே! நாளைக்காலை தேவாலய மணி அடித்தவுடன் அவன் தலை உருண்டே தீரும்! என் தீர்ப்பில் மாற்றமில்லை!" என்று கர்ஜித்தான் மன்னன்.

அந்தக் கறுப்புப்புடவைக்காரி அழுதாள்-புரண்டாள். "அரசே! தொத்துங்கிளியாக வாழ்ந்தேனே, இனி அவரை விட்டுப் பிரிவது எங்ஙன பிரபு! தயை காட்டுங்கள்! இளம்பெண்மீது இரக்கம் வையுங்கள்!"

"முடியாது! தேவலாயமணியோசை! அது உன் கணவன் தூக்கு மேடையேறும் நேரம்! இஃம்! போ! போ! யாரங்கே! இவளை வெளியே தள்ளுங்கள்!"-மன்னன் எரிந்துவிழுந்தான்.

மறுநாட் காலை!

மன்னன் வெகுண்டெழுந்தான். கூண்டிலே கிழவனொருவன் நிறுத்தப்பட்டிருந்தான்.

"ஏன் இன்று காலை தேவாலய மணி ஒலிக்கவில்லை?"

"அடித்தேன், ஆனல் ஒலி கிளம்பவில்லை."

"ஒலி கிளம்பவில்லை! வேடிக்கை! இவனைப் பட்டினிபோட்டுக் கொல்லுங்கள்."

கிழவன் இழுத்துச்செல்லப்பட்டான்.

(10-ம் பக்கம்)

திராவிட மாணவ முன்னேற்றக் கழக
2-வது மாநில மாநாடு

★

19—11—55 சனி காலை 8-30 மணிக்கு—
சென்னை கோகலே மண்டபத்தில்
நடைபெறும்

★

தலைவர் : **கே. ஏ. மதியழகன்**
திறப்பாளர் : **இரா. நெடுஞ்செழியன்**
பேசுவோர் : **சி. என். அண்ணாதுரை**
என். வி. நடராசன்

ஆகியோரும், மற்றும் திராவிட மாணவ மணிகளும்.
இசைச் செல்வி ஜி- கஸ்தூரியின் இன்னிசையுடன் துவங்கும்
நன்கொடை : ரூ. 1, அணா 8

உ, பில்லப்பன், எல். லெனின், மாறன் டி. கே பொன்னுவேலு
து. தீ தயாளன் போருளாளர் வரவேற்புக் குழுத்
செயலாளர்கள் தலைவர்

18—11—55 வெள்ளி காலை 8 மணி முதல் இராயபுரம்
'அறிவகத்'தில் நன்கொடைச் சீட்டுகள் கிடைக்கும்

எமது புதிய வெளியீடுகள்

★

பன்மொழிப் புலவர்
கா. அப்பாதுரை, எம்.ஏ, எல்.டி.,
எழுதிய

சரித்திரம் பேசுகிறது ரூ 3--0--0
மருதூர் மாணிக்கம் ரூ 3--0--0

கவிஞர் கண்ணதாசன் எழுதிய
ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி ரூ 4--8--0

சிறந்த நாவலாசிரியர்-நாடகாசிரியர்
நாரண-துரைக்கண்ணன்
("ஜீவா") எழுதியவை

மேனகா ரூ 1--8--0
சதுரங்கம் ரூ 1--4--0
புதுமைப் பெண் ரூ 1-12-0

அருணன் எழுதியவை
இல்லற இன்பம் ரூ 1--0--0

அருணோதயம்
சென்னை-14.

வெளிவந்துவிட்டது
திராவிடர் காட்குறிப்பு
(டயரி) 1956.

இந்த டயரியில், தி. மு. க. முழு விவரங்கள், சட்டதிட்டங்கள், பேச்சாளர் முகவரிகள், 1100 தி. மு. க. கிளைகளின் பட்டியல், அஞ்சல் பத்திரப்பதிவு கட்டணங்கள், விற்பனை வரி வருமானவரி விவரங்கள் உள்ளன. பக்கந்தோறும் உலக அறிஞர்களின் புதிய பொன் மொழிகள்

அழகிய முழு கலிகோ பைண்டு
500 பக்கம் ரூ. 1—0—0
செலவு தனி. விற்பனையாளர்
கழிவு 20 சதவிகிதம்.
ஒரு டயரி வேண்டுவோர்
ரூ. 1-3-0 அனுப்புக.

குறிப்பு : தி. மு. க. தலைவர்களின் பெரிய படங்கள், பொங்கல் வாழ்த்துகள் கிடைக்கும்.

போர்வாள்
பவழக்காரத் தெரு,
சென்னை-1.

சுவைதரும் பொற்கரம்

★ ★

இல்வாழ்க்கை நடத்துகிற தலைவன் தலைவியரின் அன்புப் பிணைப்பு அளவிடற்கரியது. தலைவியின்பால் தலைவனுக்குள்ள அன்பின் காரணமாக, சுவை இல்லாத உணவுகூட, சுவை உடையதாகத் தெரியலாம். அது எவ்வாறு ?.........

★ ★

காதல் வாழ்க்கை கைகூடுவதற்காகப் பொருள் தேடச் சென்ற தலைவன், பொருள் தேடிய பின்னர் ஊர்வந்து சேர்கிறான். பொருள் தேடி வருவதற்கு முன்னர் அவனிடம் பொறுமல்தான் நிறைந்திருந்தது. இப்போது பொறுமல் குறைந்திருக்கிறது.

பொறுமல் குறைந்தாலும்கூட, பெற்றோரின் எதிர்ப்பு இருந்து தான் வருகிறது. தலைவியுடன், தான் சொந்த ஊரிலேயே வசிப்பது என்பது இயலாத ஒன்று என்று அவன் நினைக்கிறான். அதனால், தலைவியோடு, வேற்றூர் சென்று, அங்கே தங்கள் இல்வாழ்வைத் தொடங்கலாம் என்று திட்டம் போடுகிறான். திட்டத்தை நிறைவேற்ற முற்படுகிறான்.

ஒரு நள்ளிரவு. இருவரும் வீட்டை விட்டு வெளியேறுகின்றனர். வேற்றூர் சென்றடைகின்றனர். அங்கே அவர்கள் தங்கள் இல்வாழ்க்கையைத் தொடங்குகின்றனர். துன்பம் இன்றி, துயரம் இன்றி, மனச் சஞ்சலம் ஏதுமின்றி அவர்கள் வாழ்க்கை நடைபெற்று வருகிறது. காதல் மணமானதால் அவர்களின் உள்ளங்களில் கடுகளவு வருத்தம் கூட இல்லை.

ஆனால், தலைவியின் தாய்மட்டும் தன் மகளை எண்ணிப் பெருந்துன்பம் அடைகிறாள். தலைவன் அழைத்துச் சென்றிருப்பான் என்பதுஅவளுக்குத் தெரியும். அதனால் கூட அவள் கவலைப்பட வில்லை. தன் மகள் சமையல் துறையில் திறமை இல்லாதவளாயிற்றே, அவள் எப்படி குடும்பத்தை நடத்துவாள் என்ற எண்ணம் தான் தாயின் மனதை வாட்டியது. அவளது கவலை தோய்ந்த முகத்தைக் கண்ட செவிலித் தாயும் வருந்தினாள். பெற்றதனால் மட்டும் தாய் என்று பட்டம் பெற்ற இவளே வருந்தும்போது, பிறந்தது முதல் நேற்றுவரை தலைவியை வளர்த்து வந்த செவிலித்தாய் எவ்வளவு வருந்துவாள் ?

அதனால், தலைவியின் தாயை நோக்கி செவிலித்தாய், "நீ எதற்கும் கவலைகொள்ள வேண்டாம்; நான் சென்று உன் மகளின் இல்வாழ்க்கையை அறிந்து வருகிறேன்" என்று சொல்லிப் புறப்படுகிறாள்.

செவிலித்தாய், தலைவன் தலைவி இல்வாழ்வு நடத்தும் ஊர் அறிந்து, அங்கே செல்கிறாள். அவர்களின் இல்லத்தையும் கண்டுபிடித்து விடுகிறாள். அங்கே பலநாட்கள் வதிகிறாள். அவ்வாறு அவள் அங்கு வதிகையிலே ஒரு நாள்...

தலைவன் அலுவல் காரணமாக வெளியே சென்றிருக்கிறான். வீட்டிலே தலைவி சமையல் துறையைக் கவனிக்கிறாள். செவிலித்தாய் தன் வீட்டிற்கு விருந்தாக வந்திருப்பதனால், அவளைச் சமையல் துறைக்கு அனுப்பக்கூடாது என்று எண்ணுகிறாள் தலைவி. மேலும், தான் சமைக்கும் சமையலைத் தன் தலைவன் எவ்வாறு மகிழ்ச்சியுடன் உண்கிறான் என்பதைச் செவிலித்தாய் தெரிந்து கொள்ளட்டும் என்ற எண்ணம் வேறு அவளைச் சமையல் தொழிலில் மும்முரமாக ஈடுபடச் செய்கிறது.

சமையலை ஆரம்பிக்கிறாள். காந்தள் மலர் போன்ற தன் மென்மையான விரல்களினால் கட்டித்தயிரைப் பிசைகிறாள். சமையல் தொழிலில் சிறந்த பயிற்சி இல்லாததனால்,சமையல் செய்யும்போதுகூட பட்டுப் புடவை உடுத்தி இருக்கிறாள். குழம்பு கூட்டிய தன் கையைப் பட்டுப் புடவையிலேயே துடைத்துக் கொள்கிறாள். தாளிப்புப் புகை, அவளது குவளை மலர்க் கண்ணை வருத்துகிறது. அப்போதும் அவள் உள்ளம் வருந்தவில்லை. ஒரு வகையாகக் குழம்பைக் கூட்டிவிடுகிறாள். எப்படிக் குழம்பு தெரியுமா? தீய புளிக் குழம்பு அது! அனுபவம் இல்லாததால் புளியை அதிகம் கலந்து விடுகிறாள். செவிலித் தாய்க்கு இது புரிகிறது. ஆனாலும் அவள் அதனைச் சொல்லவில்லை.

நெடுநேரம் கழித்து வருகிறான் தலைவன். அவனுக்கு உணவு பரிமாறுகிறாள் தலைவி. தலைவி கூட்டிய புளிப்பு மோர்க்குழம்பை நன்றாக இருக்கிறது என்று சொல்லிக் கொண்டே, உணவை உண்கிறான். இதைக் காண்கிறாள் செவிலித்தாய். புளிக் குழம்பைச் சாப்பிட்டுவிட்டு, தலைவன் திட்டுவான் என்று எதிர்பார்த்தாள் அவள். தலைவன் திட்டாததைக் கண்டு அவளது மனம் ஆறுதல் பெறுகிறது. புளிப்பு நிறைந்த குழம்பையும் நன்று எனச் சொல்லி உண்கின்ற தலைவனை எண்ணி வியக்கிறாள். அவனை அந்த நிலைமைக்குக் கொண்டு வந்து விட்ட தனது மகளின் திறமையை எண்ணிவியக்கிறாள். தன் மகள் இல்வாழ்வை எப்படி நடத்துவாளோ என்று அஞ்சியவள் இந்த நிகழ்ச்சியைக் கண்டு மனம் மிக மகிழ்கிறாள். இந்த நற்செய்தியைத் தலைவியின் தாய்க்குத் தெரிவிக்கத் துடிக்கிறாள். அதனால், தன் மகளின் வீட்டை விட்டுப் புறப்படுகிறாள். தலைவி இன்னும் சில நாட்கள் தங்கிப் போகச் சொல்கிறாள். செவிலி அதற்கிசையவில்லை. இந்த அரிய செய்தியைத் தலைவியின் தாய்க்குச் சொல்லி, அவளின் கவலையைப் போக்க வேண்டும் என்ற எண்ணம் அவள் மனதில் நிலைத்து விட்டது. அதனால் தலைவியின் வேண்டுகோளையும் நிராகரித்துவிட்டு, தாய் இருக்கும் ஊரை நாடி வருகிறாள். தலைவியின் தாயைக் கண்டு, தான் நேரில் கண்டவற்றையும் தலைவி தலைவன் இல்வாழ்க்கையையும் வகைபடச் சொல்கிறாள்.

"உன் மகளை அப்பாவி என்று நினைத்தாய். அவள் அப்படியல்ல. ஒன்றும் தெரியாதவள் என்று நினைத்தாய். அவள் கைதேர்ந்தவளாய் விட்டாள். சமையல் செய்யத் தெரியாததால் சங்கடம் உறுவாள் என்று நினைத்தாய். அவள் சாமர்த்தியசாலியாக இருக்கிறாள். அவள் செய்கின்ற புளிப்பு நிறைந்த குழம்பைக் கூட 'நன்றாக இருக்கிறது' என்று சொல்லிக் கொண்டே உணவு உண்கிறான் தலைவன். அந்தச் சுவை குழம்பினிடத்தில் இல்லை. உன் மகள்மீது உள்ள அன்பின் சுவைதான் காரணம். ஒன்றும் தெரியாதவள் என நினைத்தோம். அவள் ஊரையே விற்றுவிடுவாள் போல் இருக்கிறது" என்று சொன்னாள் செவிலித்தாய். இதைக் கேட்ட தாயின் வருத்தம் குறைகிறது— வாட்டம் நீங்குகிறது. மனம் அமைதியடைகிறது.

இக் காட்சியைக் குறுந்தொகைப் பாடல் படம் பிடித்துக் காட்டுகிறது. அந்தப் பாடல் இதுதான் :

முளிதயிர் பிசைந்த காந்தள்
மெல்விரல்
கழிவுறு கலிங்கம் கழாஅது
உடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை
கமழத்
தாந்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன்
உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்
றொண்ணுதல் முகனே !

இச்செய்யுளில் தலைவி தலைவன் அன்பு வாழ்க்கை புலனாகிறது. தீம்புளிக் குழம்பையும் இனிதாக இருக்கிறது என்று சொல்லுகின்ற தலைவனின் திறத்தையும், அந்த அளவிற்கு தலைவனின் அன்பைக் கவர்ந்து விட்ட தலைவியின் திறத்தையும் எண்ணின் வியப்பு மேலிடுகிறது. அந்தத் தலைவியின் கை தங்கத்தால் செய்யப்பட்டதோ என்றஐயம்தான் தோன்றுகிறது.

தமிழ்ப்பித்தன்

★ ★ ★

தொத்துங்கிளி...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கறுப்புப்புடவைக்காரி அவைக்குள் ஓடிவந்தாள். "மன்னவா என் கணவனை விடுவியுங்கள். தேவாலயமணி ஒலிக்கவில்லை. ஒலிக்க வேண்டிய நேரம் தவறிவிட்டது. இனி அவர் சாகக்கூடாது. இதுதான் அரசநீதி!" என்று புலம்பி அழுதாள். அவள் உடலெல்லாம் ரத்தங் காயங்கள் நிறைந்திருந்தன.

"கணவன்பால் எனக்கிருந்த பற்றை, பாசத்தை-காதலை-மதிக்காத மன்னவா! இதோ ரத்தவடுக்கள்! தேவாலய மணியை ஒலிக்கவிடாத வகையில் இரவு முழுதும் அந்த மணியில் தொங்கி நைந்ததன் விளைவு" என்று சொன்னாள்.

மன்னன் கண்கலங்கினான், அவளது கணவனை விடுவிக்க உத்தரவிட்டான்.

—இந்தக் கதை சாந்தியின் உள்ளத்தில் மின்னலிட்டு மறைந்தது:

"ஆங்கிலக் கவிஞனின் கற்பனையே அலாதிதான்" என்று அவள் தன்னை அறியாமல் சொல்லிவிட்டாள்.

அப்போது தெருவிலே கைதட்டல் கேட்டது. நினைவிழந்திருந்த சாந்தி உற்றுக்கவனித்தாள். "சூரியோதயத்தைத் தடுத்து கணவன் உயிரை நளாயினி காத்தாள்" என்று பாடகர் கூவினார்.

சாந்தி-அந்தப் பார்ப்பன குலப்பாவை, தானே சிரித்துக்கொண்டு உள்ளே ஓடினாள். 'தொத்துங்கிளி' என்று தலைப்பிட்ட ஒரு கவிதை நூல் அவள் படுக்கையில் விரிந்துக் கிடந்தது.

— தென்னரசு.

அண்ணா சேலம் வருகை

நவம்பர் 20, 21, 22, 23 தேதிகள்

20-11-55 அன்று காலை 10 மணிக்கு சித்தேஸ்வரா டாக்கீசில் சிறப்புச் சொற்பொழிவு. மாலை 6 மணிக்கு விக்டோரியா மார்க்கெட்டில் பொதுக் கூட்டம்.

அன்பளிப்பு

வண்ணை தி. மு. கழகத் தோழரும் கருணாகராஸ் கேப் உரிமையாளருமான திரு கே. ஏ. ஜோதி பாண்டியன் அவர்களின் துணைவியார் தோழியர் தெய்வநாயகி அம்மாள் அவர்களுக்கு பிறந்த ஆண் குழந்தைக்கு வடசென்னை தி.மு.க முன்னணி வீரர் எஸ். பி. டி. திராவிட மணி அவர்களால் போர்ஷா என்று பெயர் வைக்கப்பட்டது.இதன் நினைவாக 'தென்றல்' இதழுக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

பன்மொழிப் புலவர். கா. அப்பாதுரையார் எம். ஏ., எல். டி

பதில் தருகிறார்

ப.முல்லைவழுதி, புதுக்கோட்டை.

குறத்தி மாட்டிய
வறற்கடைக் கொள்ளி
ஆர மாதலின்
அம்புகை யயலது
சாரல் வேங்கைப்
பூஞ்சினை தவழும்
புறம்பு பாடின
ரதுவே அறம்பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்
வாரேன் என்னான்
அவர்வரை யன்னே

என்ற புறநானூற்று 108-ம் பாடல்,பாரி இறந்த பின்னர் பாடப் பெற்றதா? அன்றி இறந்தற்கு முன்னர் பாடப் பெற்றதா?

பாரி இறத்தற்குக் காரணம் கபிலர் தான் என்றும் மேலே கண்ட பாடலின் ஈற்றிலே காணப்படும் இரு வரிகள்மூலம், மூவேந்தருக்கும் பாரியைக் கொல்ல வழி கூறினார் என்றும் வித்துவான் ஆ. சிவலிங்கனார் தமது ''பாரியைக் கொன்றவர் யார்?'' என்ற கட்டுரையில் எழுதியுள்ளார் இது சரியா? இது பற்றிய தங்களது முடிவு யாது?

புறநானூறு பழைய உரையில், பாரியை கபிலர் பாடியது என்ற குறிப்பு மட்டுமே இப்பாடலில் காணப்படுகிறது. ஆனால், புலவர் ஔவை. சு துரைசாமி அவர்களின் உரைப்பதிப்பில், பாரி இறந்ததன் பின் பாடப்பெற்றது என்ற குறிப்பு காணப்படுகிறது. இப்பாடல் போக்கை நோக்க, இதுவே சரியானது என்று கொள்ளவேண்டும்.

கபிலர், இப்பாட்டின் ஈற்றில் காணப்படும் இருவரிகள்மூலம் மூவேந்தருக்கும் பாரியைக் கொல்ல வழி கூறினார் என்று புலவர் ஆ சி. கூறுவது இவ்வகையில் பொருத்த மற்றது என்றே கொள்ளல்வேண்டும் தவிர, ஆரியன் பண்பு தமிழ்ப் பண்பாகவே கபிலரால் பாராட்டப் பட்டுள்ளது. இன்றும் இது சால்புடைய தமிழர் பண்பே என்பதில் ஐயமில்லை. இதனால் தமிழர் தம் அழிவு நேர்ந்தால்கூட இப்பண்பில் வழுவமாட்டார் என்பது திருவள்ளுவர் கொள்கை

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

பண்பில்லாதவர் இதனைப் பயன் படுத்தினாலும் அதனால் கேடுறுவது அழிபவர் இனமல்ல, அழிப்பவர் இனமே என்று திருவள்ளுவர் கருதியிருக்கவேண்டும்.

இந்நிலையில் ஆரியன் அழிவு, தமிழ்ப் பண்புக்கு ஒரு கலங்கரை விளக்கமாகும். கபிலர் அதை சுட்டிக்காட்டுவதும் பாரிக்கு கேடு சூழ்வது ஆகாது தமிழ் இனத்தின் பெருமையை திருவள்ளுவர் வழி நின்று காட்டுவதே ஆகும், குற்றமாகக் கொள்ளவேண்டுவது இக் கட்டத்தில் மூவேந்தரின் தமிழ்ப் பண்பு குன்றிய செயலேயாகும். ஆரிய வேள்விகள் ஆற்றி, கொல்லாமை நோன்பை குறைப்படுத்திய வர்களே மூவரசர் என்பதை அவர்கள் பெருமரபுக்குரிய நாம் மறந்து விடுவதற்கில்லை.

கபிலா ஆரிய அரசன் பிரகத்தனுக்கே தமிழ்ப்பண்பின் சால்புரைத்த பெரியார் என்பதும் மறக்கத் தக்கதன்று.

மு. சம்பங்கி, வாணியம்பாடி.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இயற்றிய 'அழகின் சிரிப்பு' எனும் நூலில் 'தமிழ்' எனும் தலைப்பின்கீழ் 'சாகாத் தமிழ்' எனும் சிற்பிரிவின் கண் வரும் 'காப்பியர்கள்' எனும் சொல் எவரைக் குறிப்பிடுகின்றது? தொல்காப்பியரைக் குறிப்பிடுவதாயிருந்தால், யாது காரணத்தால் கவிஞர் அவ்வாறு உரைத்துள்ளார்?

கவிஞர் "அகத்தியர் காப்பியர்கள்" என்று குறிப்பிடுவது அகத்தியம் என்ற இலக்கணத்தை எழுதியவராகக் கொள்ளப்படும் புராண அகத்தியரையும், அவர் சீடராகவும் தொல்காப்பியத்தின் ஆசிரியராகவும் புராண மரபில் கொண்டு ஒட்டப்படும் திருணதூமாக்கினி அல்லது தொல்காப்பியர் என்ற அகத்தியர் மாணுக்கரையும், இவர் போல்வாரையும் குறிக்கும். அகத்தியர் என்ற ஒருவர் இருந்தார் என்பதற்கோ, அவர் தமிழ் இலக்கணம் செய்தார் என்பதற்கோ ஆராய்ச்சியாளரால் உறுதியான சான்று கிட்டவில்லை. புராண கதை, முற்றிலும் புராண கதையே என்று கூறலாம். ஆகவே திருணதூமாக்கினி என்ற பெயரும் முழுதும் கற்பனையே அவர் பற்றிய கதையும் கற்பனையே. தொல்காப்பிய ஆசிரியர் பெயர் அது என்பதற்கோ எத்தகைய சான்றும் இல்லை. திருவள்ளுவர், ஔவையார் கதைகளைப் போல இவை இடைக்கால இட்டுக் கட்டுக்களே.

இராமாயண பாரதக் கதைகள் உண்மை வரலாறு அல்ல என்று உணர்பவர்களும், அவற்றை உண்மையாகக் கொள்ளுபவர்க்கு அறிவுறுத்தும் வகையில் சார்பு, எதிர்பு காட்டி (இராமன் ஆரியன், இராவணன் திராவிடன் என்று) நூலாசிரியர் நோக்கப்படி கூறுவதுபோல, அகத்தியர் கதை பொய் என்றாலும் அதில் தமிழை இழிவுபடுத்தும் பொய் என்பதற்காக தமிழ்க்கலைஞர் அதைக் கண்டித்து மறுக்க நேருகிறது.

தொல்காப்பியம் தனித்தமிழ் இலக்கண நூல் என்றும், அதற்கு முன் நூல்கள் இருந்தாலும் அதுவே தனிப்பெரும் முதல் நூல் என்றும் ஆசிரியர் மறைமலையடிகளார் கருதுகின்றார். அதுவே பெரும்பான்மைத் தமிழ் அறிஞர் முடிவுமாகும். ஆயினும் தனித்தமிழ் இயக்கத்தில் ஈடுபடுவதன் முன்னர் புராணக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியர் தமிழ் கற்று, ஆரியருக்காக தமிழ் இலக்கணம் இயற்றிய தமிழ் ஆரியர் என்று சில அறிஞர்கள் கூறியதை கவிஞர் இப்பாடலில் மனத்தில் கொண்டிருக்கலாம்.

கவிதைப்பித்தன், சென்னை-6.

திருக்குறளில் மடியின்மை என்ற அதிகாரத்தின் இறுதிக் குறளான,
''மடியிலா மன்னவன் எய்தும்
அடியளந்தான்
தாஅய(து) எல்லாம் ஒருங்கு''
என்ற குறளுக்கு அறிவுமணம் கமழும் உரைவிளக்கம் தருக.

அடியளந்தான் என்பது புராண முறையில் மாவலியை அழிக்க வாமனனாக வந்த திருமால் அடியால் உலகை அளந்ததைக் குறிப்பதாகவே மிகப்பல உரையாசிரியர்கள் கொண்டுள்ளனர். ஆயினும் பரிமேலழகரே 'தன்னடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன்' என்று கூறி, தன் வழக்கத்துக்கு மாறாக புராணத்தைச் சுட்டாமலே விட்டுவிட்டார். புராணப் பொருள் இங்கே பொருத்தமும் சிறப்பும் தரவில்லை என்பதை பரிமேலழகர்கூட எண்ணி இருக்க வேண்டும்.

வெளிவந்த புதிய உரைகள் உள்ளே புலவர் குழந்தை உரை ஒன்றுதான் புதிய பதச்சிதைவு மூலம் புதுப்பொருள் காண முயன்றுள்ளது.

பழைய பதச்சிதைவு

மடிஇலா மன்னவன் எய்தும்
அடி அளந்தான்
தாயது எல்லாம் ஒருங்கு.

இதன் பொருள் அடியால் உலகத்தை அளந்த கடவுள் தாவிய பரப்பு எல்லாவற்றையும், சோம்பல் இல்லாத அரசன் ஒரு சேர அடைவான் (டாக்டர் மு வரதராசன் திருக்குறள் தெளிவுரை)

புலவர் குழந்தை பதச்சிதைவு

மடி இலா மன்னவன் எய்தும்
மடி அளந்து ஆன்று
ஆயது எல்லாம் ஒருங்கு.

இதன் பொருள் சோம்பலில்லாத அரசன் (மடி அளந்து :) சோம்பல் அடைந்ததால், (ஆன்றுயது எல்லாம்:) முன்பு தன்னை விட்டு நீங்கிய செல்வத்தையெல்லாம், (ஒருங்கு எய்தும் :) ஒருங்கே அடைவான்.

குழந்தையின் விளக்கவுரையின் படி அளத்தல் என்பதன் பொருள் கலத்தல். மடி அளந்து என்பது, சோம்பல் குணத்துடன் கலந்து அதாவது சோம்பலடைந்து என்று பொருள் படும். ஆன்றுயது எல்லாம் ஒருங்கு எய்தும் என்பது, முன்பு சோம்பலாயிருந்தாலும் அதனால் வந்த நட்டத்தையெல்லாம் பின்னால் ஏற்பட்ட சுறுசுறுப்பு அகற்றிவிடும் என்று பொருள்படும்.

புலவர் குழந்தை உரை நல்ல கருத்துத் தருகிறது. புராண முறைப்படி கூறும் உரையைவிட அது மிகச் சிறந்தது என்பதில் ஐயமில்லை. ஆயினும் திருவள்ளுவர் மனத்தில் கொண்ட பொருள் எது என்பது இன்னும் ஆராய்ச்சிக்குரிய செய்தியாகவே இருக்கமுடியும். இது வகையில் கீழ்க்கண்ட குறிப்புக்கள் பயனுடையன ஆகலாம்.

(அ) புலவர் குழந்தையின் பொருள் சிறந்ததாயினும் பதச்சிதைவில் பழைய முறையே நயமுடையது. மடியிலா மன்னவன் மடியளந்து என்பதைவிட மடியிலா மன்னவன் அடியளந்தான் என்பதே சொல் நயமும் பொருள் நயமும் உடையதாக இருக்கிறது.

(ஆ) அடியளந்தான் என்பது ஆரிய புராணப்படி திருமாலைத் தான் குறிக்கவேண்டும் என்று இல்லை. புத்தநெறி, அருகநெறிப்படி புத்தனையோ அருகனையோ குறிப்பதாகக் கொள்ளலாம். ஆரிய புராணங்களைப்போல அறிவுப் பண்பற்ற மரபுகளல்ல அவைகள். ஆனால், இந்தப் பொருளிலும் 'அடியளந்தான் கடவுளையே' குறிக்கும். பகுத்தறிவாளர் ஏற்றுக்கொள்ளும் கடவுட் கருத்தாகவே அது அமையும். கடவுள் படைப்பு முழுவதும் மடிமையில்லாத மன்னவன் பெறமுடியும் என்ற கருத்தை அது தரும்.

(இ) அடியளந்தான் தாயது எல்லாம் என்பதற்கு நாமதித்து சோம்பலால் மெல்லத் தொழில் செய்பவர் செய்யவேண்டுமென்று மனத்தால் விரும்பிய எல்லாவற்றையும்' என்று பொருள்படலாம்.

(ஈ) அதே சொற்கள் 'சோம்பிப் பிறரை அண்டி (காலைப் பிடித்து) வாழ எண்ணுபவர், அண்டி வாழ்வதால் கிடைக்கக்கூடும் என்று, மனத்தில் எண்ணியதை யெல்லாம்' என்றும் பொருள்படலாம்.

அறிவிப்பு

◉

நான் எழுதிய ஐந்து சிறுகதைகளை 'பழக்கூடை' என்ற பெயரில், திருச்சி திராவிடப் பண்ணையார் என் அனுமதிபெற்று ஒரு ரூபாய் விலைக்கு வெளியிட்டிருக்கிறார்கள். இதற்கிடையே சென்னையிலே கே. ஆர். நாராயணன் என்ற பேர்வழி, ஒரே ஒரு சிறுகதையை மட்டும் என் பெயரில், என் அனுமதியும் பெறாமல் எட்டணா விலைக்கு வெளியிட்டு மோசடி செய்துள்ளார். அந்த நபர் மீதும், அதை அச்சிட்டவர் மீதும் சட்டப்படி கிரிமினல் வழக்கு தொடர முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். அவர் வெளியிட்டுள்ள 'காதல் ஓவியம்' என்ற புத்தகத்தை பொது மக்கள் வாங்கி, திருட்டு வியாபாரிகளை ஆதரிக்க வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,

மு. கருணாநிதி

19. 'கலை' எனத் தொடங்கி 'தலை' என முடித்தல்

வெண்பாப் போட்டி 19ன் பரிசுபெற்ற வெண்பாவையும் ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் சென்ற இதழில் வெளியிட்டோம். இந்த இதழில், மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களை வெளியிட்டுள்ளோம்.

கலைமதியில் துள்ளும் கயல்கண்டேன் ! வெல்லும்
சிலைகண்டேன் ! சிந்தித்தேன் ! செந்தேன்-தளையவிழும்
முண்டகத்தில் கண்டேன் முகைமுல்லை ! விண்டதெலாம்
தன்னிடங்கொண் டதுவோர் தலை.

—ஆர். மல்லபிள்ளை, திருச்சி.

★

கலையணிந்த செல்வி கவினுர் தடந்தோள்
நிலைகுலைய நெஞ்சங் களிக்க-விலைமதியா
நன்மணியாய் வாழ்வின் நறும்பேருய் வந்ததே
தன்னே ரிலாம தலை.

—மரகதம், புதுவை.

★

கலைகண்டு நெஞ்சம் கனிந்திடுவார் ! பஞ்சை
நிலைகண்டு நெஞ்சம் நெகிழார் !-விலைகொடுத்தே
ஓட்டுக்கள் கேட்பார் ! ஒழுக்கம் சிறிதறியார் !
நாட்டுக்கு நச்சுத் தலை

—வித்துவான். வேங்கடேசன், நெல்லிக்குப்பம்.

★

கலையத்தில் கஞ்சி குடிக்கையில் எந்தன்
குலையில் எரிச்சல் குறையும்-கலந்து
எழுமெண்ணம் நீய்க்கும் ! இடர்வாழ்வைக் கூறும்
தழும்பால் தடித்த தலை.

—ஏ. சிவா, வேலூர்.

★

கலைமகளைப் பூசிக்கும் கண்மூடி மாந்தர்
வலைவீழும் புள்ளாகி வாடத்-தலைநிமிர்ந்து
வாழ்கின்றுர் மேனுட்டார் வாழ்வழியை ஆய்ந்தறிந்தே !
தாழ்வில்லை அன்னேர் தலை.

—செ. பானு, வேலூர்.

★

கலையறியார்; வெள்ளைக் கதருடுப்பார்; சொந்த
நிலையில்லார்; ஈடில்லா நேர்மை-விலைபேசும்
புல்லர் தலையில் பொருந்திடுமக் குல்லாவைத்
தள்ளிவிடில் வெற்றுத் தலை.

—அழ. சிதம்பரம், தாம்பரம்.

★

கலைமலிந்த எங்கள் கவின்தமிழ் நாட்டை
நிலைகுலைந்த தாக்க நினைத்தார்-அலைகௌிந்த
ஆழிநிகர் தென்படைகள் ஆர்த்தெழுந்து விட்டாலே
தாழும் கனத்த தலை.

—நெடுந்திரையன், சேலம்.

★

கலையாத கட்டழகுக் காமினிநம் காதல்
நிலைமாறிப் போகுமென நெஞ்சங்-குலையேல் !
எவர்தா னெதிர்த்தாலும் ஏற்றமாய் நாம்மணம்
தவறுமற் செய்வோம் தலை.

—சோ. கண்ணப்பன், பேரூர்.

★

கலைகள் பலவாழ்க கன்னல் மொழியும்
நிலையாக வாழ்ந்தே சிறக்க-தலைநிமிர்ந்தே
நம்மனோர் வாழ்க நலமெல்லாம் வாழ்கென்ற
தன்மை சிறத்தல் தலை.

—ச. கங்காதரன், திருவையாறு.

கலைசால் தமிழ்ப்புலவன் காய்வகற்ற நோக்கி
'விலையான பொன்னுறுக' என்றுரைத்து-நல்குமணன்
சிந்தும் உயிர்கருதான் சிங்கார வாளுருவித்
தந்தனன் கொய்யத் தலை.

—அரும்பொன், விராச்சிலை.

★

கலைகமழும் கன்னித் தமிழகத்தை மாற்றுர்
குலைக்கப் படைகொணர்ந்தால் கொன்று-திலகமே !
வீழ்த்துவானே யன்றி விரவார் வருத்தினும்
தாழ்த்தான் தமிழன் தலை.

—ஓங்கல் பா. அமிர்தராசன், கள்ளிகுளம்.

★

கலைத்தேன் சொட்டக் கன்னித் தமிழிசைப்பாள்
அலைபோற் காதல் அமுதளிப்பாள்-நிலை மறந்து
அன்ன நடையாள் ஆடிடுவாள் எந்தனுக்குத்
தன்னாலே ஆடும் தலை !

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

★

கலைமன்னுந் தென்னகத்தின் காஞ்சிநகர் தந்த
மலைப்புகழ்கொள் அண்ணுவின் மாட்சி-நிலைமைக்
கிலைவேறு மற்றெவரும் ஈடில்லை நம்மில்
தலைமைக் கவரே தலை.

—க. வி. வரதன், சென்னை

★

கலைந்து மலர்சிந்த கற்புடைய மங்கை
குலைந்து அதையெடுத்துக் கொண்டே-சிலைமார்பில்
வந்தித்து ஏற்றி மாலையொடும் பாமாலை
சிந்தித்து வைத்தாள் தலை.

—அ. கிருஷ்ணன், சரவணபட்டி

★

கலைவண்ண ஓவியமே கன்னல்நீஞ் சாறே
சிலையன்ன பொன்னேநம் காதல்-நிலைசெய்ய
சாதிதடுத் தாலும் மணஞ்செய்வோ மில்லையெனில்
சாதலை ஏற்றல் தலை.

—சு. சுப்பிரமணியம், பாகனேரி

★

கலைசேர் மதியின் நிலையும் கலைஞன்
நிலையும் கருதிடின் நேராம்-உலகில்,
நிலையின்றித் தேயும் நிலவின் சிறப்பில்
கலைஞன் சிறப்பே தலை.

—சு. சுடலையாண்டி, B. Sc., செங்கோட்டை

★

கலைந்தோடும் காரே ! கதிரோனை மறைக்க
அலைவதால் மாண்பு அடையாய்-நிலமகளின்
மெய்யிலே யூர்ந்து மலையாருய் ஓடையாய்
செய்யெல்லாம் செல்லல் தலை.

—சீ. ரங்கநாதன், நல்லாம்பட்டை

★

கலைசிறந்த கன்னித் தமிழின் சிறப்பைக்
கொலைசெய்யக் கொணர்வதே இந்தி-இளைஞனே
செந்தமிழ்ச் சீருறவும் நம்நாடு பெற்றிடவும்
தந்திடுவா யுன்றன் தலை.

—நா. தனபாலன், சுப்பிரமணியபுரம்

★

கலைமகள் பூசைசெய்வர் கல்லாமை நீக்கார்
விலைமகளோ அன்னவள் விந்தை-உலகுவக்கும்
ஈரோட்டுப் பூங்காவின் ஏற்றமுறும் காஞ்சிமலர்த்
தார்சூட்டு பூசை தலை.

—வே. ச. ஞானப்பிரகாசம், வேகாமங்கலம்

★

கலைவாழும் அன்புருவே ! கற்கண்டே ! காதல்
வலைவீசும் மீன்விழியாய் ! வீங்கும்-முலைப்பாரம்
தாங்காது மின்னலிடை ! தாரணிந்த என்மார்பில்
நீங்காது நிற்றல் தலை.

—பாவன்பன், குடந்தை

★

கலையுலகில் தோன்றிய கன்னித் தமிழ்நாட்டார்
கலையின்பாற் பட்டதெல்லாம் கண்டார்-நிலைபெறவே
பல்கலைகள் ஆய்ந்திட்டார் என்றாலும் அக்கலையில்
கல்விக் கலைதான் தலை.

—புலி. சங்கரலிங்கம், விருதை

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். எ. எம். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.